கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை

13-5-1973

30 காசு





ஆண்,
ஆளப்பிறந்தவன்.
அவன் துணைவி,
அவனது இதயராணி.
பிள்ளைக் கனியமுது,
பேசும் பொற் சித்திரம்.

இல்லறத்தின்
சுவைக்களனில்
மலர்ந்தவை,
மபத்லால்
துணிமணிகள்!

மெஃப்ரின் எஸ்டர்காட் டெரோஸெல்

எளிய சாயல்களிலும்,
எடுப்பான வண்ணங்களிலும்,
பெருமித பிரிண்டுகளிலும்
'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர்
சேலைகள், பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன் சேலைகள்;
'மெஃப்ரின்' பாலியெஸ்டர்
இழைகலந்த உடுப்புத்
துணிகள் — இலேசான லான்கள்,
கோடை நிழல் படரும்
கேம்பரிக்குகள், கோலாகல
நகை மிளிரும் பாப்ளின்கள்;
இன்னெழில் மிளிரும்
வண்ணங்களிலே, வரிகளிலே,
கட்டங்களிலே 'எஸ்டர்காட்'
பாலியெஸ்டர் இழைகலந்த
காட்டன் சூட்டிங்குகள்; அதி
நவீனமான அரும்பெரும் அழகு
வண்ணங்களில், பிரிண்டுகளில்
'டெரோஸெல்' பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன்
ஷர்ட்டிங்குகள்.

**மபத்லால்
க்ரூப்**

AIYARS-M, 174 TM

கோகுலம்

மலர் 2 :: இதழ் 3

மே 13, 1973

பிரமாதீச, சித்திரை 31

சந்தா விவரம் :

ஒரு வருடம் ரூ. 7-00

ஆறு மாதம் ரூ. 3-50

நிர்வாகி, கோகுலம்

கல்கிப் பூங்கா, சென்னை - 600031



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்





அட்டைப்பட அம்பி :

''அடேடே! அவ்வளவும் சர்க்கரைன்னு நினைச்சேன், உப்பில்லே கரிக்குது!''

வண்ணப்படம்: வி. ரகுநாத்



மழலைப்பூ

— கமலக்கண்ணன்

கண்ணே மணியே கற்பகமே — உன்
    கனிவாய் முத்தம் கற்கண்டோ?
பொன்னே பொருளே பூச்செண்டே—நீ
    பொழிவது மழலைத் தேன்மழையோ?
பண்ணே பவளப் பனிமலரே—நீ
    பளிங்கில் வடித்த எழிலுருவோ?
விண்ணே படைப்பின் வியப்பே—உந்தன்
    விழியின் ஒளியும் இறைபொருளோ?

□

கண் தெரிந்த குருடர்!

'தமிழ்முடி'

கண்ணில்லாத குருடன் ஒருவன்
    இரவு நேரத்தில் — வழி
தன்னந் தனியே நடந்துவந்தான்
    சாலை ஓரத்தில்!

எரியும்விளக்கை ஏந்திக்கொண்டு
    நடந்தான் தேடியே — அதைப்
புரிந்திடாத மனிதர்கண்டு
    சிரித்தார் கூடியே!

'குருடனே உனக்குக்கையில்
    விளக்கு வேண்டுமோ? — அது
இருந்திட்டாலே பார்வைதெரிய
    இனிது தூண்டுமோ?'

இந்த மொழியைக் கேட்ட குருடன்
    வியந்து சிரித்திட்டான்! — தனை
வந்து கேள்வி கேட்டவர்க்குப்
    பதிலை உரைத்திட்டான்!

''கருகும் மென்று இருட்டுநிறைந்த
    இந்த வேளையில் — விழி
இருந்திட்டாலும் குருடராவர்
    இந்தச் சாலையில்!

அதனால் நீங்கள் என்னை மோதித்
    தள்ளிடா வண்ணம்! — நான்
இதமாய்க் கையில் விளக்கை ஏந்தி
    வந்தனன் முன்னம்!''

இந்தப் பதிலைக் கேட்டதுமே
    நாணி வெட்கினர் — அவன்
தந்தபதிலைப் பொன்மொழியாய்
    வாழ்வில் பேணினர்.

இந்தக் கதையில் உள்ள கருத்தைப்
    புரிந்து கொள்ளுவீர் — அதைச்
சிந்தை மகிழ்ந்து மற்றவர்க்கும்
    தெரியச் சொல்லுவீர்!



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

மதுரையில் வாழும் ஆண்களும் பெண்களும் கண்ணபிரானைக் காணும் ஆசையால் ஆடைகளையும் அணிகலன்களையும் மாற்றி அணிந்து கொண்டு பரபரப்புடன் வீதிக்கு வந்தார்கள். சிலர் மாடியின் மீது ஏறி நின்றார்கள்.

வழியில் கம்சனுக்கு ஆடை வெளுத்துத் தரும் ஒரு சலவைத் தொழிலாளியைக் கண்டு, கண்ணபிரான், ''அப்பா! சலவைத் தொழிலாளியே! சில ஆடைகளை எங்களுக்குத் தருவாய்'' என்று கேட்டார். அவன் சீற்றம் அடைந்தான். ''காட்டில் ஆடு மாடு மேய்க்கும் நீங்கள் மன்னனுடைய ஆடைகளை விரும்பலாமா? இதனை எங்கள் அரசர் அறிந்தால் உங்களைச் சிறையிலே அடைத்து வைப்பார். ஓடிப் போங்கள்'' என்று. உதாசீனமாகப் பேசினான். சுவாமி அவனை ஓர் அடியால் வீழ்த்தி, ஆடைகளை எடுத்துத் தம் அன்பர்களுக்கு வழங்கினார். பலராமரும் கண்ணனும் உயர்ந்த உடைகளை உடுத்துக் கொண்டனர்.



அடுத்து சுதர்மன் என்ற பூக்காரனுடைய வீட்டுக்குச் சென்றார். அவன் அடிபணிந்து நறுமலர்களால் இராமகிருஷ்ணர்களை அலங்கரித்தான். ஐயன் அவனுக்கு அருள் புரிந்து மறுபடியும் வீதிக்கு வந்தார்.

கூனிக்கு அருள் புரிந்தது

இராமகிருஷ்ணர் வருகின்ற அரச வீதியில் இனிய பரிமளம் பொருந்திய சந்தனத்தை ஏந்திக் கொண்டு ஒரு கூனி எதிர்ப்பட்டாள். பகவான் ''பெண் மணியே! இந்த நறுமணச் சந்தனத்தை யாருக்கு எங்கே கொண்டு போகின்றாய்?'' என்று வினவினார்.

கூனி ''ஐயனே! உனக்குப் பல கோடி வணக்கம். நான் கம்ச மன்னனின் பணிப் பெண். என் பேர் திருவக்கிரை. நான் கலக்கும் சந்தனம் அதிக மணங் கொண்டது. இதை அவருக்காகக் கொண்டு போகின்றேன். எம்பெருமானே! இதை நீர் பூசிக்கொள்ளும்'' என்றாள். கண்ணபிரான் அவள் அன்புடன் கொடுத்த நறுமணச் சந்தனத்தைத் தாமும் பலராமரும் பூசிக்கொண்டு, அவளுடைய கூனை நிமிர்த்தி, அவளை அதி அழகியாகச் செய்தருளினார்.

அவள் பரமனைப் பணிந்து, ''சுவாமி! நான் உம்மை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன். என் சிறு குடிலுக்கு வருக'' என்று அன்புடன் அழைத்தாள். கண்ணபிரான் ''மாதரசே! வந்தவர்

களுக்கு உதவி செய். நான் வந்த வேலையை முடித்துவிட்டு வருவேன்'' என்று கூறிப் புறப்பட்டார்.

தநுர்ப் பங்கம்

மலர்களாலும் சந்தனத்தாலும் பூசிக்கப்பட்டுள்ள வில் வைத்திருக்கும் தநுர்ச்சாலைக்குள் நுழைந்தார்கள் ராமகிருஷ்ணர்கள். காவலர் தடுத்தனர். அவர்களைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்து, மதயானை கரும்பை முறிப்பது போல், அந்தப் பெரிய வில்லை எடுத்து முறித்தெறிந்தார். அந்த ஓசையைக் கேட்டு அனைவரும் மூர்ச்சித்து விழுந்தார்கள். மயக்கம் தெளிந்து, காவலர்கள் எழுந்து கண்ணனை அடிக்கும் பொருட்டு வெகுண்டு வந்தார்கள். பலராமரும் கிருஷ்ணரும் ஒடிந்த வில்லின் நுனியால் அவர்களை அடித்துத் துரத்தினார்கள்.

பின்னர் கண்ணனும் பலராமனும் கோபாலர்கள் தங்கியிருந்த நந்தவனம் போய்த் தங்கினார்கள்.

கம்சன் கனவிலும் கண்ணாடியிலும் நீரிலும் தன் தலை யில்லாததாகக் கண்டான். சந்திரன் பல துண்டங்களாகப் பிளந்து போவதாகக் கண்டான். பிணத்தைத் தழுவுவதாகக் கனுக் கண்டான். பலப் பல துர்நிமித்தங்களைக் கண்டு அஞ்சினான். ராமகிருஷ்ணர்கள் வில்லையொடித்துக் காவலர்களை அடித்து விரட்டிய செய்தியைக் கேட்டு அச்சமும் நடுக்கமும் கொண்டான். மறுநாள் பொழுது புலர்ந்தது. கம்சன் அரசவையில் அரியணைமீது அமர்ந்திருந்தான்.



அமைச்சர்களும் ஏனைய பரிவாரங்களும் அவனைச் சூழ்ந்து அமர்ந்திருந்தார்கள். அவன் ஆள் விட்டு அழைக்க, நந்தகோபர் தமது பரிசனங்களுடன் அரசவை வந்து கப்பத்தைக் கட்டினார். கம்சன் அவரை அன்புடன் வரவேற்று ஆசனத்தில் இருத்தினன். சாணூரன், முஷ்டிகன் என்ற இரு மல்லர்கள் வாசலில் இரு கிங்கிரர்களைப் போல் நின்றிருந்தார்கள்.

கம்ச வதம்

கண்ணபிரான் பலராமரும் கோபாலர்களும் புடைசூழ அரசவை நாடி வருவாராயினர். வழியில் கம்சன் கட்டளைப்படி மதம் ஏறிய குவலயாபீடம் என்ற யானை நின்றது. பாகனைப் பார்த்துப் பகவான், ''ஏ மூடனே! யானையை அப்புறம் போகச் சொல்'' என்றார். பாகன் கண்ணனைக் கொல்லுமாறு யானையை ஏவினன். யானை துதிக்கையால் கண்ணனைப் பிடித்துக் கொல்ல ஓடி வந்தது. சுவாமி அதன் வாலைப் பிடித்துப் பின்னுக்கு ஈர்த்தார். அதனை வலம் இடமாகச் சுற்றிச் சிறிது நேரம் விளையாடினார். முடிவில் அதன் மத்தகத்தில் குத்திக் கொம்புகளைப் பறித்து அந்த யானையை மாய்த்தருளினார். அந்த யானையுடன் வந்த மற்ற யானைகளையும் மாவுத்தர்களையும் வதைத்தருளினார்.


சாணூரன் எதிர்த்து ''அடே சிறு பாலனே நில்! உன் உயிரை இயமபுரத்துக்கு ஓட்டுவேன்'' என்று கூறிச் சிம்மநாதஞ் செய்தான். கண்ணன் புன்னகை பூத்து, ''மூடனே! உனக்கு முடிவு காலம் வந்து விட்டது'' என்று கூறி, அவனுடன் மல் யுத்தம் செய்தார். சாணூரன் மலை போன்ற கரங்களால் கண்ணனுடைய மார்பில் குத்தினன். அது மலரால் அடித்தது போல் இருந்தது.

முஷ்டிகனுடன் பலராமர் போர் புரிந்தார். வல சாரி, இட சாரியாகச் சுழன்று சிறிது நேரம் மற்போர் புரிந்தார்கள். சாணூரனைக் கண்ணபிரான் வதைத்தருளினார். முஷ்டிகனைப் பலராமர் கொன்று போட்டார்.

அரசவையுள் நுழைந்த கண்ணபிரான் கம்சன் எதிரில் சென்றார். கம்சன் அநேக ஆயுதங்களுடன் போர் புரிந்தான். எம்பெருமான் சிரித்தவண்ணமாக அவனை அடர்த்துப் போரிட்டு எலியைப் புலி அடிப்பது போல் கம்சனை வதைத்தருளினார். அவனுடைய தம்பியர்கள் எண்மரையும் பரிசாயுதத்தால் கொன்றார். கம்சவதம் முடிந்தவுடன் சிறைச்சாலையுள் விலங்கு பூட்டப் பெற்ற நிலையில் இருந்த வசுதேவரையும் தேவகியையும் சிறை நீக்கித் தொழுது துயரந் தீர்த்தார். (தொடரும்)



மூளைக்கு வேலை



மேலேயுள்ள கோலத்தில் கேள்விக் குறியிட்டுள்ள வீட்டில் அமைக்க வேண்டிய எண் என்னவாக இருக்க வேண்டும். எந்த நியதியில் மற்ற எண்கள் (கடிகாரச் சுழற்சியில்) அமைக்கப்பட்டுள்ளன என்பதைச் சிந்தித்த பின் செயல்படவும்.

இதோ மூன்று பேர்கள் நிற்கிறார்கள். மூன்றாமவனின் தலைக்கு என்ன மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும்? முதல் இருவருடைய கால்கள், தலை எண்களின் அமைப்பைக் கவனிக்கவும்.


விடை: 66.

ஒரு வீட்டிலிருந்து அடுத்த வீட்டு எண் இரட்டிப்பாக்கப்பட்டு அதிலிருந்து 2 கழிக்கப்பட்டுள்ளது. அதன்படி 34×2—2=66.

விடை: 5.

ஒவ்வொரு மனிதனின் கால்களின் எண்களைக் கூட்டி வருவதில் பாதியே தலை எண். அதன்படி 8+2=10. 10÷2=5.

காமராஜரைக் காப்பியடியுங்கள்! — தாணு



அடுத்த இதழில் யார்?



விறகுவெட்டியும் பூதமும்

◄ அரங்கன் ►

ஒரு விறகுவெட்டி ஒரு புளியமரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அதி லிருந்து ஒரு பூதம் வெளிப்பட்டது. அதைப் பார்க்கப் பயமாயிருந்தது. பயத்தை வெளியே காட்டிக் கொள்ளா மல், ''நீ யார்?'' என்று கேட்டான் விறகுவெட்டி.

'' நான் இந்த மரத்தில் வாழும் பூதம். நீ ஏன் இதை வெட்டுகிறாய்?'' என்று விறகுவெட்டியைப் பூதம் திருப்பிக் கேட்டது.

'' என் பிழைப்புக்காக'' என்றான் விறகுவெட்டி.

''உன் பிழைப்பு என்றால் எப்படி ?''

'' இந்த விறகை ஊருக்குள்ளே கொண்டு போய் விற்பேன். காசு கிடைக்கும். அதைக் கொண்டு அரிசி, பருப்பு, காய்கறி எல்லாம் வாங்குவேன். அவற்றை என் பெண்டாட்டி சமைப் பாள். நாங்கள் உண்டு வாழ்வோம்.''

''உன் பிழைப்புக்காக என் பிழைப் பைக் கெடுக்கலாமா? நான் வாழும் மரத்தை வெட்டினால் அப்புறம் நான் எங்கே வாழ்வது ?'' என்றது பூதம்.

'' உன் சொல்லைக் கேட்க வருத்த மாய்த்தான் இருக்கிறது. ஆனால் இந்த மரத்தை நான் வாங்கிவிட்டேன். இது யாருக்குச் சொந்தம் தெரியுமா ? ஊர்ப் பொதுவுக்குச் சொந்தம்.''

'' ஊர்ப் பொது உடைமையை நீ ஒருவனே வாங்கிக் கொள்வது நியாயமா ?'' என்றது பூதம்.

''ஏன் நியாயம் இல்லை? வியாபாரந் தானே ?''

''ஊரார் எல்லாரும் கூடி உன்னிடம் இதை விற்றார்களா ?''

'' இல்லை ; ஊர்ப் பொதுவுக்காக நாட்டாண்மைக்காரர் விற்றார். நான் வாங்கினேன்.''

'' நாட்டாண்மைக்காரருக்கு யார் அதிகாரம் கொடுத்தார் ?''

'' ஊரார்.''

''நானும் ஊரில் உள்ள பூதந்தான். அதோடு இந்த மரம் என் அநுபவ பாத்தியமானது. நாட் டாண்மைக்காரருக்கு நான் அதிகாரம் கொடுக் கவில்லை. என்னைக் கேட் காமல் அவர் இதை விற்றது சரியில்லை. அது எப்படியோ போகட்டும். உன்னை நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன்.''

'' என்ன?''

'' இந்த மரத்தை வெட்டாதே.''

''என் பிழைப்பு என்ன ஆவது?''

''அதற்கு நான் வழி செய்கிறேன்.''

''என்ன வழி?''

'' நாள்தோறும் ஊர்க் காட்டுக்குப் போகிறேன். அங்கே மரங்களை வெட்டு கிறேன். ஏராளமாய் விறகு சேகரித்து நானே உன் வீட்டு முற்றத்தில் கொண்டு வந்து போடுகிறேன். நீ அதை விற்றுப் பிழைத்துக் கொள்.''

விறகுவெட்டி சிறிது யோசித்தான். பிறகு சொன்னான்: ''உன் யோசனை நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் காடெல்லாம் சர்க்காருக்குச் சொந் தம். அதில் எதையும் நாம் வெட்டக் கூடாது. அது குற்றம். அப்படி நீ குற்றம் செய்ய நான் உடந்தையாய் இருக்க மாட்டேன்.''

பூதம் 'கடகட' வென்று சிரித்தது. ''அட போடா ! பிழைக்கத் தெரியாத மனுஷா. இந்தக் காலத்தில் இதெல் லாம் பார்க்கக் கூடாது. பார்த்தால் வாழ முடியாது ; சாக வேண்டியது தான்.

'' செத்தாலும் பரவாயில்லை. தீய செயலுக்கு உடன்பட மாட்டேன்.''

'' இந்த நாளில் எல்லாரும் எப் படியோ வாழ்கிறார்கள். எவனாவது அறநீதி பற்றிப் பேசினால், அது பிறருக் காகப் பாசாங்கு. எவனும் தான் வாழ எந்த அநீதியும் செய்யத் தயங்குவ தில்லை. தவிர, இந்தச் செயலை நீ செய்ய வேண்டியதில்லை; நான் செய் கிறேன். நீ ஏன் மறுத்துச் சொல்கிறாய்? நீ பிழைக்கும் வழியைப் பார். நான் உதவுகிறேன். இந்த மரத்தை மட்டும் வெட்டாதே!'' என்றது பூதம்.

விறகுவெட்டி வெகுநேரம் யோசித் துப் பார்த்தான். 'பூதம் சொல்வதும் ஒருவிதத்தில் நியாயமாகவே தோன்று கிறது. அதை ஏன் நான் பகைத்துக்

கொள்ள வேண்டும்?' என்று எண்ணினான். ''சரி, நீ சொல்வதற்கு உடன்படுகிறேன்'' என்று பூதத்திடம் சொன்னான்.

பூதம் களிப்புற்றது. ''நீ நல்ல புத்திசாலி'' என்று விறகு வெட்டியைப் பாராட்டியது.

கைலாசத்தில் அமர்ந்திருந்த பார்வதி ஸமேதரான பரமசிவன் இதைக்கண்டு 'கலீர்' என்று சிரித்தார்.

''என்ன சிரிக்கிறீர்கள்?'' என்று பார்வதி கேட்டாள்.

''பூதமும் விறகுவெட்டியும் பேசிக் கொண்டதை நீ கேட்கவில்லையா?''

''கேட்டேன். அவர்களின் பேச்சுத்தான் முடிந்துவிட்டதே.''

''பேச்சு முடிந்துவிட்டது. நியாயம் முடியவில்லை. அது பற்றி உன் தீர்ப்பு என்ன?''

''நீங்கள் பரமேசுவரன்; உலகத்தின் நாயகன். உங்கள் தீர்ப்பே முக்கியம்.''

''நீ உலகத்தின் அன்னை பராசக்தி. உன் தீர்ப்பும் முக்கியந்தான். நீ வேறு நான் வேறு அல்ல. உன் தீர்ப்பை முதலில் சொல்.''

''பூதம் உலக வழக்கைச் சொல்லியது. விறகு வெட்டி அறிவுக்கு ஒத்த முடிவுக்கு வந்தான்.''

''நியாயத்தையும், தர்மத்தையும் சார்ந்து நின்ற அவனைப் பூதம் அதர்மத்துக்கு மாற்றிவிட்டதே.''

''எப்படியாவது வாழ முயலுவது அதர்மமா?''

''தர்மத்தில் நிலைநிற்பவன், செத்து ஒழிந்தாலும் தர்மம் பிறழக்கூடாது என்றே உறுதியாயிருப்பான்.''

''அப்படியானால் விறகுவெட்டியின் முடிவு சரியில்லை என்கிறீர்களா?''

''சரியில்லை என்று சொல்லவா வேண்டும்? சரியேயில்லை.''

''நாமோ உலகத்தின் தாய் தந்தையர். விறகு வெட்டியை நாம் சரியான வழிக்குத் திருத்தலாமே?''

''தாராளமாய்த் திருத்தலாம் நம்மால் முடிந்தால்.''

''முடியாதா? நம்மால் முடியாதது ஒன்றும் இல்லை.''

''ஆனால், ஒவ்வொரு ஜீவனுக்கும் சுதந்திரம் இருக்கிறதே, அதைப் பறிக்கலாமா?''

''பின்னே இதற்கு என்னதான் வழி? நல்லவனைக் கைவிடலாமா?''

''நல்லவன் என்றால் தானாகவே வழிபிறக்கும்.''

''ஆகவே நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்கிறீர்கள்.''—



''ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.''

பார்வதி — பரமேசுவரரின் பேச்சு இதோடு முடிந்தது.

பூதம் இம்மிகூட வாக்குப் பிறழாமல் நடந்து கொண்டது. ஊர்க் காட்டு மரங்களை விறகாக வெட்டி, விறகுவெட்டியின் வீட்டில் கொண்டு வந்து குவித்தது. விறகுவெட்டி அதை விற்றுச் சுகமாக வாழலானான்.

காட்டு மரங்கள் குறைவதை அதிகாரிகள் கண்டார்கள். திருடனைக் கண்டுபிடிக்க முயன்றார்கள். பூதம் அல்லவா திருடன்? அது அதிகாரிகளின் கண்ணில் தட்டுப்படவில்லை.

அதிகாரிகள் ஊரெல்லாம் தேடினார்கள். விறகுவெட்டியின் வீட்டில் காட்டு மரங்களெல்லாம் விறகாகக் கிடந்த குவியலைக் ! கண்டார்கள். அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

''காட்டு மரங்களை ஏன் திருடினாய்?'' என்று கேட்டார்கள்.

'' நான் ஒரு பாவமும் அறியேன்'' என்றான் விறகுவெட்டி.

''அத்தனை காட்டுமரமும் உன் வீட்டிலே விறகாகக் கிடக்கிறதே, தெரியாதென்றால் எப்படி?'' என்று அதிகாரிகள் கேட்டார்கள்.

பூதத்தின் செயலைச் சொல்லலாமா? சொன்னால் பூதம் சீறுமே ! பயமாயிருந்தது. விறகுவெட்டி என்னவோ மழுப்பினான். அவனை இழுத்துக் கொண்டு அதிகாரிகள் நீதிபதியிடம் போனார்கள். '' ஐந்தாறு நாட்களில் விசாரிக்கிறேன். அதுவரையில் இவனைச் சிறையில் வைத்திருங்கள்'' என்று உத்தரவிட்டார் நீதிபதி.

விறகுவெட்டி சிறைப் பட்டான். அவன் பெரும் வருத்தம் அடைந்தான். இரவெல்லாம் தூங்கவேயில்லை. சுவாமியே நினைவாக அரைத் தூக்கத்தில் இருந்தான். அப்போது பார்வதி—பரமேசுவரர் அவனுக்கு ஒரு கனவில் தோன்றினார்கள்.

பார்வதி சொன்னாள்: ''பிரபுவே! அப்பாவியான விறகுவெட்டி வருந்துகிறானே, தெரியுமா ?''

'' முட்டாள்தனத்தினால் வருந்துகிறான். சத்தியத்திலும் தர்மத்திலும் உறுதியான நம்பிக்கை அவனுக்கு இல்லை. பூதத்துக்கு இதனால்தான் பயப்படுகிறான். அதற்குப் பயப்படாமல் உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும். அப்போது அவன் பிடிபட்டுச் சிறைபுகுந்திருக்கமாட்டான்'' என்றார் பரமசிவன்.

பரமசிவனின் இந்த வார்த்தைகள் அவன் காதில் தெளிவாய் விழுந்தன. 'நீதி விசாரணையில் உண்மையைச் சொல்வேன் ; பூதத்துக்குப் பயப்படமாட்டேன்' என்று உறுதி பூண்டான்.

நாலு நாளைக்கெல்லாம் விசாரணை வந்தது. நீதிபதி முன் வாக்குமூலம் கொடுத்தான் விறகுவெட்டி. ''நான் குற்றவாளி அல்ல'' என்றான். ''பூதம் தான் குற்றவாளி'' என்று தெரிவித்தான். தான் புளியமரத்தை வெட்டப் போனபோது பூதம் தோன்றியது என்றான். அதோடு தனக்கு உண்டான வாதத்தைச் சொன்னான். கடைசியில் பூதம் சொன்ன ஏற்பாட்டைச் சொன்னான். ''அந்தப்படியே அது நடந்து வருகிறது'' என்றான்.

''பூதத்தை எங்களுக்குக் காட்டுவாயா ?'' என்று நீதிபதி கேட்டார்.

'' யார் கண்ணிலும் படாமல் காற்றுப் போல் பூதம் வேலை செய்கிறது. என் மனைவி கண்ணில்கூடத் தட்டுப்படுவதில்லை. அதை உங்கள் கண்ணுக்குக் காட்ட என்னால் முடியாது. அது வேலை செய்வதை வேண்டுமானால் நீங்கள் பார்க்கலாம்'' என்றான் விறகுவெட்டி.

''எங்கே ?''

'' என் வீட்டில்.''

நீதிபதியும் அதிகாரிகளும் விறகுவெட்டியின் வீட்டுக்குப் போனார்கள். எல்லாரும் அங்கே காத்திருந்தார்கள். சூரியன் மலைவாயில் விழுந்து மறையும் நேரம் நெருங்கியது.

''எல்லாரும் விழிப்பாயிருங்கள்.... இதுதான் பூதம் வரும் வேளை!'' என்றான் விறகுவெட்டி.

நீதிபதியும் அதிகாரிகளும் கவனமாய் ஆவலோடு நிமிர்ந்திருந்தார்கள்.

அப்போது காற்று அடிப்பதுபோல் ஏதோ 'படபட' என்று சத்தம் கேட்டது. உருவம் ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. மேலே எங்கேயோ இருந்து 'டக் டக்' என்று விறகுகள் ஏராளமாய் ஒவ்வொன்றாய் முற்றத்தில் வந்து விழுந்தன.

''இதுதான் பூதத்தின் வேலை'' என்றான் விறகுவெட்டி.

எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அதிகாரிகள் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள். நீதிபதி தம் வீட்டுக்குப் போனார். போகும்போது, ''நாளைக் காலையில் கச்சேரிக்கு வா'' என்று அவர் விறகுவெட்டியிடம் சொல்லிவிட்டுப் போனார்.

விறகுவெட்டிக்கு அன்றிரவும் தூக்கம் வரவில்லை. பூதத்தையே நினைத்தபடி படுத்திருந்தான். கண் சோர்ந்தது. அரைத் தூக்க நிலையில் ஒரு கனவு கண்டான். அதில் பூதம்

தோன்றியது. ''நீதிபதியின் விசாரணையில் என்னை ஏன் காட்டிக் கொடுத்தாய்? உன்னைக் கொன்றுவிடுகிறேன், பார்'' என்று பயங்கரமாய் உறுமியது. விறகுவெட்டி நடுங்கினான். ''பரமசிவா! உமது பேச்சைக் கேட்டுச் சத்தியத்திடமும், தர்மத்திடமும் உறுதிபூண்டேனே. அதற்குச் சாவுதான் பரிசா ?'' என்று வருந்தினான்.

அப்போது இன்னொரு பக்கத்தில் ஒரு சிரிப்பு கேட்டது. அதே பரமசிவனின் சிரிப்பு. எல்லாம் கனவில்தான்.

'' ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்றாள் பார்வதி.

''விறகுவெட்டி புலம்புவதைக் கேட்டாயா ?''

''கேட்டேன். பூதத்துக்குப் பயப்படுகிறான். உங்களை நோகிறான். நியாயந்தானே. உங்கள் பூதகணங்களில் ஒன்று அது. அதை நீங்கள் கட்டுப்படுத்தக் கூடாதா ?''

'' எதற்கும் சற்றுப் பொறுத்துப் பார்ப்போம். நாளை விசாரணை எப்படி ஆகிறது, பார்க்கலாம்.''

மறு நாள் காலையில் நீதிபதியின் கச்சேரியில் அதிகாரிகளும் விறகுவெட்டியும் ஆஜரானார்கள்.

''விறகுவெட்டி குற்றவாளி அல்ல; பூதம்தான் குற்றவாளி '' என்றார் நீதிபதி. விறகுவெட்டியை விடுதலை செய்தார். பூதம் கச்சேரிக்கு வரவேண்டும் என்று கட்டளை போட்டார். அந்தக் கட்டளையைப் பூதத்திடம் யார் கொடுப்பது ? அதுதான் யார் கண்ணுக்கும் தெரிவதில்லையே! நீதிபதியே அதற்கு ஒரு வழி சொன்னார்.

'' என் கட்டளையைப் புளியமரத்தில் கொண்டு போய் ஒட்டுங்கள் !'' என்றார்.

அப்படியே நீதிபதியின் கட்டளையைப் புளிய மரத்தில் சேவகர்கள் ஒட்டினார்கள். பூதம் அதைப் பார்த்தது. மகா கோபம் கொண்டது. காற்றாய்ப் பறந்து சென்றது. நேரே பார்வதி பரமேசுவரரிடம் போயிற்று.

'' இதென்ன அநியாயம் ? நானோ உங்கள் பூதகணங்களில் ஒருவன். என்னைப் பூலோக மனிதர் கட்டளையிடுகிறாரே. பூலோக நீதிபதியின் கட்டளைக்கு நான் இணங்குவதா?'' என்று மகாதேவரைக் கேட்டது.

'' நீ எதுவரையில் பூலோகத்தில் திரிகிறாயோ அதுவரையில் மனிதர்களின் நீதிக்குக் கட்டுப்படத்தான் வேண்டும். சத்தியமாயும் தர்மமாயும் நடக்க விரும்பிய மனிதனின் மனத்தைக் கலைத்தாய். விறகுவெட்டியை அநீதிக்கு உடன்படத் தூண்டினாய். அவனிடம் மன்னிப்புக் கேள். அவனுடைய புளியமரத்தை அவனிடமே ஒப்புவித்து விட்டு வேறு இடத்துக்குப் போய்விடு'' என்றார் பரமசிவன்.

'' ஆனால் அந்த மரத்தடியில் ஒரு பெரிய புதையல் இருக்கிறதே. அதை நான் காத்து வருகிறேனே. அதை என்ன செய்வது?'' என்றது பூதம்.

''நியாயம் தவறாத விறகுவெட்டிக்கு அதைக் கொடுத்துவிடு. புதையலை நீ காத்து என்ன பயன்? உலகில் அது உனக்கு உதவாது'' என்றார் இறைவன்.

'' அப்படியே செய்கிறேன்'' என்று விடைபெற்றது பூதம்.


பிறகு நீதிபதிமுன் சென்றது. அவருக்கு மட்டுமே கண்ணில் தென்பட்டது; மற்றவர்களுக்குத் தென்படவில்லை. தானே குற்றவாளி என்று ஒப்புக் கொண்டது. காட்டில் இனித் திருடுவதில்லை என்று உறுதி சொல்லியது. புளிய மரத்தை விறகுவெட்டிக்குத் திருப்பிக் கொடுப்பதாய்க் கூறிற்று. நீதிபதி, ''சரி'' என்றார். பூதத்தை மன்னித்தார்.

விறகுவெட்டியின் வீட்டில் அவன் தனியாக இருக்கையில் அவன் முன் பூதம் தோன்றியது. அவனிடம் மன்னிப்புக் கேட்டது. ''புளியமரத்தை விட்டு வேறே எங்கேயாவது நான் போகிறேன். புளிய மரத்தை நீயே வெட்டி எடுத்துக் கொள். அந்த மரத்துக்குக் கீழே உள்ள ஒரு பொந்தில் பெரும் புதையல் இருக்கிறது. அதையும் நீ எடுத்துக் கொள். யாரிடமும் சொல்லாதே '' என்றது.

''புதையல் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தம் இல்லையா? இந்தப் புதையலைச் சர்க்காரிடம் கொடுத்துவிடுகிறேனே '' என்றான் விறகுவெட்டி.

'' வேண்டாம். இந்தப் புதையலைப் பரமசிவன் கட்டளைப்படி நான் உனக்குத் தந்தேன். உன் சத்திய நெறிக்குப் பரிசாக அவரே உனக்குக் கொடுத்தது இது. அப்பாவியான நீ கஷ்டப்பட்டுப் பிழைக்கக் கூடாது என்பது அன்னை பார்வதியின் திருஉள்ளம். ஆகவே, நீயே இதை வைத்துக் கொண்டு சுகமாக வாழ்'' என்றது பூதம்.

அதை ஒப்புக் கொண்டு புதையலை எடுத்தான் விறகுவெட்டி. அதை வைத்துக் கொண்டு, தானும் தன் மனைவியுமாய்ச் சுகமாய் வாழலானான். எவ்வளவு சுகப்பட்டாலும், அவன் சத்திய நெறி மட்டும் தவறுவதேயில்லை.



அதிர்ஷ்டக் குலுக்கல்

சமமான இரு கோஷ்டிகளாகப் பிரிந்து கொள்ளுங்கள். விளையாட்டை ஆரம்பிக்கு முன் இரண்டு பெரிய பிளாஸ்டிக் பைகளைத் தயார் செய்துகொள்ள வேண்டும். பித்தான், ஆணி, சேப்டி பின், சோடா மூடி, சாக்பீஸ் இப்படியாகச் சில பொருள்களை. இவை ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு சேகரித்து ஒரு பைக்கு ஒன்ருக அவைகளைப் போடுங்கள். ஒரு கட்சியில் பத்துப் பேர்களானுல் நீங்கள் ஒவ்வொரு பையிலும் பத்துப் பொருள்களை மட்டுமே சேகரிக்க வேண்டுமென்பதில்லை. 20 பொருள்கள் வரை சேகரிக்கலாம். அப்போதுதான் விளையாட்டில் சூடு பிடிக்கும். ஆனுல் இரண்டு பைகளிலும் உள்ள பொருள்கள் ஒன்று போலவே இருக்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு கட்சிக்கும் வெற்றி வாய்ப்புக்கள் சமமாக இருக்கும். இனி கட்சியிலுள்ள ஆட்டக்காரர்கள் ஒவ்வொருவ



▼ என்ன தப்புப் பண்ணிேனும். என்று சிறையிலடைத்தீர்கள்.



▼ குளித்தது போதும் கண்ணு.

ரும் எடுக்க வேண்டிய பொருள் என்ன என்பதைக் கூறுங்கள். உதாரணமாக ஒவ்வொரு கட்சியிலும் முதல் ஆசாமிக்கு ஆணி, இரண்டாமவருக்குக் கிளிஞ்சல், மூன்றும்வருக்கு சோடா மூடி. இப்படியே எல்லாருக்கும் அவரவர் பொருள்களைக் கூறிய பிறகு ஒவ்வொரு கட்சி முதல்வரிடமும் பையைக் கொடுத்து ஆரம்பிக்கலாம் என்று உத்தரவு கொடுங்கள். பையைப் பெற்றுக்கொண்டவர் அதற்குள் கையை மட்டும் நுழைத்து அதில் உள்ள பொருள்களை விரல்களால் துழாவி, ஸ்பரிசத்தால் தனக்கு உரிய பொருளை மட்டும் தேடி எடுக்க வேண்டும். குனிந்து பையைப் பார்க்கக் கூடாது. தன் பொருளை எடுத்தானதும் அடுத்தவரிடம் பையைத் தர வேண்டும். அவரும் அதே போலப் பையைப் பார்க்காமல் கைகளால் துழாவித் தன் பொருளை எடுத்துக் கொண்டதும் அடுத்தவரிடம் பையை நீட்ட வேண்டும். இப்படியே பை ஒவ்வொரு கட்சியின் கடைசி நபர் வரை போக அவரவர் தத்தம் பொருளை எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தக் கட்சி முதலில் இதைச் செய்து முடிக்கிறதோ அதுவே வெற்றி பெற்ற கட்சி என்பதைச் சொல்லவா வேண்டும்? இதைப் பல தடவைகள் தொடர்ந்து விளையாடலாம். ஒவ்வொரு முறையும் ஆட்டக்காரர்களைக் கட்சி மாற்றிக் கொள்ளலாம். வரிசையின் முதலில் வயதில் பெரியவர்களையும் கடைசியில் சிறியவர்களையும் உட்கார வைக்கலாம். ஏனென்றால் பையில் பொருள்கள் நிறைய இருக்கும்போது தேடுவது கொஞ்சம் சிரமமில்லையா? இந்த அதிர்ஷ்டக் குலுக்கலை ஆடிப் பாருங்கள்.




△ குளிச்சதும் எனக்குப் பசிக்குதம்மா!



△ எங்கேயோ பாத்துக்கிட்டு நிக்கறீங்களே! எத்தனை நேரம் வாயைத் தொறந்துக்கிட்டு இருப்பது?

▷ நல்லா வேலை வாங்கிகிட்டு நாமம் போட்டுவிடறீங்களே.








உறக்கத்துக்கு உகந்த மருந்து


நீங்களெல்லாம் சின்னக் குழந்தையாக இருந்தபோது அம்மா பாடிய தாலாட்டைக் கேட்டுத் தூங்கியவர்கள்தான். நீங்கள் மட்டுமா ? உலகத்தில் இன்று தூக்கம் வராமல் அவதிப்படும் ஏராளமான நோயாளிகளுக்கும்கூட மாத்திரை மருந்துகளை விட இந்தத் தாலாட்டே ஏற்ற மருந்து என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். பகல் முழுவதும் ஓடியாடி உழைப்பவர்களும் சிந்தனைவசப்பட்டு மூளை வேலை செய்பவர்களும் இரவில் படுக்கையில் விழுந்ததும் அவர்களை அறியாமல் தூக்கம் ஆட்கொள்ள வேண்டும். அதுவே ஆரோக்கிய வாழ்வு. அப்படி இல்லாமல் சிலர் தூக்கத்துக்கு மாத்திரை, அது இது என்றெல்லாம் விழுங்குவார்கள். பலன் இராது. இன்றைய நவீன ஆராய்ச்சியாளர்களும் கூடப் பழைய வைத்திய முறைகளில் அக்கறை கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். இசையைக் கொண்டு நோயாளிகளைக் குணப்படுத்தி வருகிறார்கள்.

இசையிலும் தாலாட்டுஇசை — அது எந்த மொழியானாலும் - மனிதனுக்கு இன்பகரமான தூக்கத்தைக் கொடுக்கும். தாலாட்டுப் பாட்டுக்களைக் குறைந்த சத்தத்தில் இசைக்கச் செய்ய வேண்டும். அந்தத் தாலாட்டு இசை தன்னுடன் உறக்கத்தையும் அழைத்து வரும். காதுகளில் புகுந்து இன்பக் கிளுகிளுப்பை ஊட்டும்போது நிம்மதி உணர்வைக் கொடுக்கும். அப்போது தூக்கம் கண்களைத் தழுவும். இனிய மிருதுவான தாலாட்டுப் பாட்டின் இசைக்கு ஏற்ப மனிதன் பரபரப்பின்றி இலேசாக மூச்சுவிடுவான். மூச்சு சீராக வந்து போகத் தூக்கம் தானாகவே வரும். மாத்திரை சாப்பிட்டால்தான் தூக்கம் வரும் என்ற மனோநிலையில் உள்ளவர்களையும் கூட இந்தத் தாலாட்டுப் பாட்டு ஆனந்தமான தூக்கத்தில் ஆழ்த்தி விடுமாம். 'டப்பாங்குத்து' இசை இதற்கு நேர்மாறான விளைவை ஏற்படுத்தும். நாடி நரம்புகளில் முறுக்கேற்றிக் கொட்டுக் கொட்டென்று விழித்திருக்கச் செய்யும். (யு. பி. எஸ்.)

பாலையில் தாவரங்கள் எப்படி வாழ்கின்றன?

பாலைவனங்களில் பல வகை உண்டு. சில பாலைவனங்கள் வெறும் மலைப் பாறைகளும், பருக்கைக் கற்களும் கொண்ட வரட்டுத் திடலாக இருக்கும். கடல்போல் பரந்த மணற்பாலைகளும் உண்டு. பாலைவனம் என்றால் கொளுத்தும் வெயில், கருக்கும் கானல்தான் என்று நினைப்பீர்கள். ஆனால் மாரிக் காலங்களில் தாங்க முடியாத குளிரைக் கொண்ட பாலைகளும் உண்டு. உதாரணம் கோபி பாலைவனம். ஆகவே, அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப ஒவ்வொரு பாலைவனத்திலும் ஜீவராசிகள் காணப்படுகின்றன. எல்லாப் பாலைவனங்களிலும் ஒரேமாதிரியான பிராணிகளையோ— தாவரங்களையோ காண முடியாது. காக்டி — (கள்ளி) என்பது பொதுவான பாலைவனத் தாவரம். கெட்டியானதும் சதைப் பிடிப்பானதுமான அடித்தண்டுடையவை இவை. இலைகள் என்று குறிப்பிடும்படி இருக்காது. பாலைவனத்துத் தாவரங்களில் இலைகள் இருக்குமானால் அவை மிகச் சிறியதாகவே இருக்கும். சிறிய இலை, அல்லது இலையே இல்லாத நிலை தாவரத்தில் உள்ள நீர் ஆவியாக வெளியேறிவிடாமல் காக்கிறது. பாலைவனத் தாவரங்களுக்கு முட்கள், விரும்பத் தகாத ருசி, வாசனை ஆகியவையும்கூட ஒரு பாதுகாப்பாகும். பிராணிகள் இத்தாவரங்களைச் சாப்பிடாமலும் அணுகாமலும் இருக்கவே இவ்விசேஷ ஏற்பாடுகள். இதனால் பாலைவனங்களில் இத்தாவரங்கள் அழியாமல் வாழமுடிகிறது. வரட்சியான, கடுங் குளிர் காலங்களில் இத்தாவரங்கள் செயலற்றுத் தூங்கும் அல்லது இக்காலங்களில் விதைகளை வெளிப்படுத்தும். இப்படி வெளிப்பட்ட விதைகள் முளைவிட்டுப் புதிய தாவரங்களை உண்டாக்கும். இப்புதிய தாவரங்கள் வெகுவேகமாக வளர்ந்து பூத்து நிறைய விதைகளை உற்பத்தி செய்யும். சில வாரங்கள், மாதங்களுக்குள் இப்புதிய தாவரங்கள் தங்களது நீண்டகால உறக்கத்துக்குத் தயாராகிவிடுகின்றன.





கல்லீரலின் காரியம் என்ன?

நம் உடலில் உள்ள சுரப்பிகளில் மிகப் பெரியது கல்லீரல்தான். மூளைக்கு அடுத்தபடியாக அதிக எடையுடைய உறுப்பும் இதுதான். சராசரி மனிதனுடைய கல்லீரல் மூன்று பவுண்டாகும்.

லிவர் அளவில் பெரியதைப் போலவே பெரிய காரியங்களும் செய்கிறது. ஜீரணமாக்கும் ரசங்களை உற்பத்தி செய்வதோடு ஒரு வடிக்கட்டியாகவும் செயல்படுகிறது. குடல்கள் மூலம் இங்கு வரும் உணவுச் சத்துக்கள் (கொழுப்பைத் தவிர) ரசாயன மாற்றம் பெறுகின்றன.

ரத்தம் நிரம்பிய கடல் பஞ்சு போன்றது கல்லீரல். குடலில் ஜீரணமான உணவுச் சத்துக்கள் இந்தப் பஞ்சு அமைப்பினால் உறிஞ்சிக் கொள்ளப்படுகிறது. கல்லீரலுக்குள் வரும் உணவுச் சத்து என்ன ஆகிறது? வெளியிலிருந்து வரும் புரதச சத்துக்கள் இங்கு உடல் வளர்ச்சிக்கு ஏற்ற 'ஹியூமன்புரோட்டீன்'களாக மாற்றப்படுகின்றன. உணவில் உள்ள விஷங்களை முறிக்கும் அமைப்பாகவும் கல்லீரல் விளங்குகிறது. புகை பிடிப்பவர்களால் நிக்கோடைன் என்ற விஷத்தையும் காப்பி அருந்துபவர்களால் காஃபின் என்ற விஷத்தையும் குடல் ஏற்றுக் கொள்ளுகிறது. இவ் விஷங்களைக் கல்லீரல் அபாயமற்ற கலவையாக்கிவிடுகிறது. உடலுக்குள் புகுந்துவிடும் கிருமிகளையும் கல்லீரல் நாசமாக்குகிறது. குடலுக்கும் இதயத்துக்கும் நடுவில் இது அமைந்திருப்பதால் நாம் அருந்தும் திரவங்களைத் தேக்கிக் கொள்ளும் ஓர் அணையாகக் கல்லீரல் செயல்படுகிறது. கல்லீரலில் உற்பத்தியாகும் ஜீரண ரசம் 'பித்த நீர்'. இந்தப் பித்தநீர் உணவோடு வரும் கொழுப்புச் சத்தை ஜீரணிக்கத்தக்க வகையில். சிறுசிறு அணுக்களாக உடைத்து அனுப்புகிறது.

பனிச் சறுக்குப் புதிதல்ல

பனியில் சற்றே வளைந்த நீண்ட பலகைகளைக் காலில் மாட்டிக்கொண்டு கைகளில் குச்சிகளை ஏந்தி பனி மலைகளில் சறுக்கியபடி வரும் Skiing என்பது நவீன கால விளையாட்டு என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் மிகப் பழங் காலத்திலிருந்தே மனிதன் அறிந்து பயன்படுத்திய ஒரு பிரயாண சாதனம் இந்தப் பனிச் சறுக்கல்.


ஐஸ்லாந்தியரின் பாஷையான 'Scidh' என்பதிலிருந்து பிறந்ததுதான் 'ஸ்கியிங்' Skid (ஸ்கித்) என்றால் பெருக்குதல் சறுக்குதல் என்று பொருள்.


சரித்திர ஆராய்ச்சியாளர், பனிச் சறுக்கல், கற்காலத்திலேயே மனிதனால் அறிந்த ஒன்று என்று கூறுகிறார்கள். குகைச் சுவரில் செதுக்கிய சில படங்களில் மனிதன் 'சறுக்குக்காலணி' மீது போவது போன்று இருப்பதை இதற்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். கிறிஸ்து மதம் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே ஸ்காண்டிநேவியாவில் உள்ள புராதன லாப்லாந்தியர் இம்மாதிரி பனிப் பாதைகளில் சறுக்கியபடி பிரயாணம் செய்வது பற்றி அறிந்திருக்கிறார்கள். 'ஸ்கி'க்கு ஒரு தேவதையும் கூட இவர்களிடையே பூஜிக்கப்பட்டிருக்கிறது. ஆதிகாலத்து பனிச் சறுக்கலுக்கு ஏற்ற காலணி பிராணிகளின் எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டது. கால்களை இத்துடன் தோல் வாரினால் பிணைத்துக் கொண்டார்கள்.

இன்றைய நவீன பாணி பனிச் சறுக்கல் விளையாட்டு நார்வேயிலுள்ள டெலமார்க் மாகாணத்தில் ஆரம்பமாயிற்று. இந்நாட்டில்தான் வருஷத்தில் அதிக மாதங்கள் பனியால் மூடப்பட்டுக் கிடக்கும். ஆகவே இங்கு போக்குவரத்துக்குப் பனிச் சறுக்கல் இன்றியமையாத ஒரு சாதனம். வேட்டையாடல், ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குப் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு போய் விற்று வர இப்படிப் பல காரியங்களுக்கும் பனிச் சறுக்கு மூலம் பயணம்செய்வதையே இவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு கலையாக, வீர விளையாட்டாகவும் வளர்த்து விட்டார்கள்.




ஷீலாவைக் காணோம்
10
கதை: வாண்டுமாமா — சித்திரம்: ரமணி.
கிழவரோடு வாதிட்டுக் கொண்டிருப்பவர்களைக் கண்ட டைகர் உள்ளே இருக்கும் ஷீலாவிடம் ஓடிற்று.
அந்தக் கொடியவர்கள்... ஷீலாவை எச்சரிக்க வேண்டும்.
என்ன டைகர். அந்தத் திருடர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல வந்தாயா? அவர்கள் குரலிலிருந்து நானே புரிந்து கொண்டேன். என்ன செய்யலாம் இப்போது?
டைகர்! கூரை ஜன்னல் வழியே எங்கே போகிறாய்?
இதோ அவர்கள் நிற்கிறார்கள். மேலிருந்து நான் வருவேன் என்று அவர்கள் எதிர் பார்க்க முடியாது.
கிழவரை மிரட்டிக் கொண்டிருந்த அவர்கள் மீது டைகர், ஆக்ரோஷமான உறுமலுடன் பாய்கிறது.


சபாஷ் டைகர்! இந்தா நீ இதை வாங்கிக் கொள்.
ஐயோ, செத்தேன்! இந்தப் பிசாசு என் குரல் வளையைக் குறி பார்க்கிறதே.
அயோக்கியப் பயல்களா! உங்கள் சாமர்த்தியத்தை என்னிடமா காட்டுகிறீர்கள்?
கிர்ர்-ர்-கிர்-ர்-
போல அறிவுள்ள மிருகத்தை நான் பார்த்ததே இல்லை. இங்கிருந்து பத்து மைலில் ஒரு போலீஸ் அவுட் போஸ்ட் இருக்கிறது. இந்தக் கடிதத்தை அங்கு கொடுக்கச் சொல்லு, உன் டைகரிடம்.
சபாஷ்டா சிங்கம்! ஆமா போலீஸ்காரர் கிட்டதான். எவ்வளவு சீக்கிரமாக அவர்களுடன் வர முடியுமோ வா, ஓடு.
கிழவர் ஷீலாவை உள்ளே போய் ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவர் வாசலில் அவர்களுக்குக் காவலாக உட்காருகிறார். வயதான அவரை விரைவிலேயே அசதி அழுத்தத் தூங்கிப் போகிறார். இதற்காகவே காத்திருந்த கயவர்கள் தங்கள் கைக் கட்டுகளை அவிழ்த்துக் கொள்ளுகிறார்கள்...
தொடரும்...



மலையரசன்

ரொம்ப ரொம்பக் காலத்துக்கு முன்னாலே, பூமி தோன்றியபோது நடந்த கதை இது. பொலிவியா நாட்டில் வாழ்ந்த பறவைகள் தங்களுள் ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க விரும்பின. அரசனாக இருக்கத் தகுதியுடைய பறவை எது? அதைத் தீர்மானிப்பது எப்படி? வாதப் பிரதிவாதங்கள், சண்டைகள், கூச்சல்கள் எல்லாம் நடந்தன. ஆனால் எவ்வித முடிவும் ஏற்படவில்லை. இந்தக் கூச்சல்களையும் கோபமான பேச்சுக்களையும் கேட்டுக் கேட்டு அலுத்து மரங்களில் உள்ள இலைகள்கூட உதிர்ந்து போயின. ஒவ்வொரு பறவையும் தானே அரசனாக விரும்பியது.

கடைசியாக ஒரு கிழட்டுப் பறவை அமைதியாக எழுந்தது. ரொம்ப அனுபவமும் அறிவும் உடைய பறவை அது. ''நம்முடைய இந்த மண்ணுலகின் அரசன் பாச்சாகமாக். நம்மில் யார் அரசராவது என்பதை அவர் முடிவு செய்யட்டும். அவருடைய தங்க மாளிகை சூரியனுக்கு அருகில் உள்ளதில்லையா ? நம்மில் யார் ஒருவர் சூரியனுக்கு அருகிலிருக்கும் பாச்சாகமாக் அரண்மனையை அடைகிறார்களோ — அவரே நமக்கு — பறவைகளுக்கு—அரசனாக இருக்கும் தகுதியுடையவராக முடியும்'' என்றது அந்தக் கிழட்டுப் பறவை.

இது எல்லாப் பறவைகளுக்குமே நியாயமாகப்பட்டது. பாச்சாகமாக்கை விட அறிவாளி, நேர்மையானவர் யாரும் இருக்க முடியாது. ஆகவே பறவைகள் எல்லாம் தங்கள் விருப்பத்தை ராஜாதி ராஜனான பாச்சாகமாக்கிடம் கலகல ஒலி எழுப்பி முறையிட்டன. பாச்சாகமாக்கும் அவைகளின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டார். ''உங்களில் யார் மிக உயரத்தில் பறந்து, சூரியனுக்கு அருகேயுள்ள என்னுடைய மாளிகைக்கு வருகிறீர்களோ, அதுவே பறவைகளின் அரசன். இச்செயலை முடிக்கும் பறவை பலவானாகவும், தைரியசாலியாகவும் கருதப்படுவான்'' என்றார்.

வாண்டுமாமா



குறிப்பிட்ட தினத்தில் எல்லாப் பறவைகளும் வந்து கூடின. 'பறக்கலாம்' என்ற குறிப்புக் கொடுக்கப்பட்டதும் அத்தனை பறவைகளும் வானத்திலே சிறகு அடித்துப் பறக்கலாயின. பல வண்ண மேகக் கூட்டங்களைப் போல் அத்தனை பறவைகளும் வானத்திலே பறந்தபோது சூரியனே மறைக்கப்பட்டு விட்டான். மேலே மேலே மேலே அவை பறந்து கொண்



டிருந்தன; வட்டமிட்டன; மிதந்தன. நேரமாக ஆகப் பல பறவைகள் பலம் இழந்து பறக்க முடியாமல் கீழே விழுந்தன. மற்றவை மேலே மேலே உயரத்துக்குப் போய்க் கொண்டிருந்தன. கொஞ்ச நேரத்தில் இன்னும் சில பறவைகள் தோல்வி அடைந்து விழுந்தன. உயரப் போகப் போகப் பறவைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. ஒரு சில பறவைகளே வட்டமிட்டபடி உயர உயரப் போகலாயின.

முடிவாக மூன்றே மூன்று பறவைகள் தான் நீல வானத்தில் சூரியனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. அவை ஒரு கழுகு, ஒரு வல்லூறு, ஒரு ராஜாளி (இதை அந்நாட்டில் காண்டார் என்று அழைப்பார்கள்) ஆகிய பறவைகள் தான். இம்மூன்றும் வட்டம் அடித்தபடியே மேலே மேலே சூரியனுக்குக் கிட்டக் கிட்டப் போய்க் கொண்டிருந்தன.

இவை ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு பறப்பதைக் கீழிருந்து பறவைகளெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தன. மிருகங்களெல்லாம் கூடக் கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தன. பார்க்க வேண்டிய காட்சிதான் அது. பயமில்லாத கழுகும் வல்லமை மிக்க வல்லூறும், கம்பீரமான ராஜாளியும் ஒன்றை ஒன்று வெற்றி கொள்ள மேல்நோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

மூன்று பறவைகளில் ஒன்று பார்வைக்கு வர வரப் பெரிதாகத் தோன்றுவதை கீழே இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்த பறவைகள் கண்டன. மற்ற இரண்டும் இன்னும் சிறியதாகிப் போய்க் கொண்டிருந்தன. பெரியதாகத் தோன்றியது வல்லூறு! பாவம், அதனால் அதற்கு மேல் முன்னேற முடியவில்லை. ஆகவே, தோல்வியை ஏற்றுக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. கழுகும் ராஜாளியும் முன்னேறிக் கொண்டிருந்தன.

அனல்.... சூடு.... நெருப்பு...தாங்க முடியாத தகிப்பு. கழுகின் உடலிலிருந்த இறகுகளெல்லாம் கருகலாயின. கண்கள் எரிந்தன. அதனால் கண்களைத் திறந்து கொண்டு பறக்க முடியவில்லை. அது மட்டுமா ? சூரியனின் தகிக்கும் வெப்பத்தை இனி அதனால் தாங்க முடியாது. கழுகு நினைவிழந்து பூமியை நோக்கி விழுவதை ராஜாளி பார்த்தது. அதன் நெஞ்சில் பெருமிதம் பொங்கி உடல் முழுதும் மின்சாரமாகப் பரவியது. இப்போது அதற்குச் சூரியனின் வெப்பம் உறைக்கவே இல்லை. பறவைகளையெல்லாம் வெற்றி கொண்டுவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் மேலே மேலே முன்னேறியது காண்டார். "எப்படியும் சூரியனுக்கு அருகில் போய் விடுவேன்" என்று உறுதி கொண்டது. வட்டமிட்டு வட்டமிட்டுச் சூரியனின் அருகே அருகே தகதகக்கும் அதன் ஒளி வட்டத்தின் மிகச் சமீபத்தில் போய்விடத் துடித்தது. அதன் தலையில் உள்ள இறகுகள் எரிந்து கருகின. ஆனாலும் காண்டார் பறப்பதை நிறுத்தவில்லை. மெள்ள மெள்ள முன்னேறியபடியே இருந்தது. அதன் கழுத்தில் உள்ள இறகுகள் எரிந்து போயின. அதனால் இப்போது மூச்சே விட முடியவில்லை. ஆனாலும் அது பறப்பதை நிறுத்தவில்லை. அதன் கண்கள் எரியலாயின. செக்கச் செவேலென்று ஆகி விட்டது. அப்போதும் அது தன் கண்களை மூடவில்லை. விழித்தபடியே உறுதியோடு உயர உயரப் பறந்தது. "சூரியனின் அருகே போய்விடுவேன். எத்தனை துன்பம் ஏற்பட்டாலும் சரி, வெற்றி பெற்றே தீருவேன்" என்று ஒரே நோக்கோடு பறந்தது காண்டார்.





ஊது பலூன் ஆட்டம்

இரண்டு ரப்பர் பலூன்களை ஊதிக் கட்டிக் கொள்ளுங்கள். அறையின் ஒரு கோடியில் சுவரை ஒட்டியிராமல், சற்று முன்னால் ஒரு நாற்காலியைப் போடுங்கள். நாற்காலிக்கு எதிர்க்கோடியில் ஆட்டக்காரர்கள் இரு கோஷ்டியாகப் பிரிந்து நில்லுங்கள் அதிகப்படியாகச் சில பலூன்களை ஊதிக் கட்டி வைத்துக் கொள்ளுங்கள். விளையாட்டின்போது எதிர்பாராமல் பலூன்கள் உடைபடுமானால் இவை பயன்படும்.

ஒவ்வொரு கட்சியின் முன்னாலும் தரையில் ஒரு பலூனை வைக்க வேண்டும். ஆரம்பிக்கலாம் என்ற உத்தரவு கிடைத்ததும் ஒவ்வொரு கட்சியிலும் முதலில் இருப்பவர் மண்டி போட்டு முழங்கால்களால் தவழ்ந்தபடி பலூனை வாயினால் ஊதி நாற்காலியை நோக்கி உந்தவேண்டும். ஊதி ஊதியே அதை நாற்காலியின் கால்களிடையே நுழைத்து மறுபடியும் ஆரம்பித்த இடத்துக்கே அதைக் கொண்டு வர வேண்டும். கைகளால் தொடக்கூடாது. ஆரம்பித்த இடத்துக்குப் பலூன் வந்ததும் அடுத்த ஆட்டக்காரர் அதை ஊதிக் கொண்டு போக வேண்டும். பலமாக ஊதினால் பலூன் இஷ்டப்படி பறந்து ஓடும். போக வேண்டிய பாதையை விட்டு விலகும். நீங்களும் தவழ்ந்தபடியே அதைச் சரியான வழி நடத்தி — இல்லை — ஊதிச் செலுத்திக் கொண்டு போக வேண்டும். எந்தக் கட்சியில் எல்லா ஆட்டக்காரர்களும் இப்படிப் பலூனை ஊதி நாற்காலியின் கால்களிடை வழியே நடத்தித் திரும்பி வதில் முதலாவதாக வருகிறார்களோ, அந்தக் கட்சியே வெற்றி பெற்றதாகும்.



திடீரென்று குளுமையான நறுமணமிக்க காற்று தென்றலாக வீசியது. 'ஆகா, இந்தக் குளுகுளு காற்று எங்கிருந்து வருகிறது? பொற்கதிரோனிடமிருந்தல்லவா இந்தக் காற்று வருகிறது! சூரியனின் தங்க நகரம் அதோ! அங்கே தங்க அரியணையில் கம்பீரமாக வீற்றிருப்பது யார்? சகல ஜீவராசிகளுக்கும் தந்தையாகிய பாச்சாகமாக் அல்லவா?' — இப்படித் தவிப்பும் வியப்பும் மகிழ்ச்சியுமாகத் தங்க நகரை நெருங்கிக் கொண்டிருந்தது ராஜாளி.

''வருக, வருக! பறவைகளின் அரசனே, வருக! காண்டாரே, ஆதவனின் பறவையே வருக.....! இத்தனை உயரம் வருவதற்கான துணிவு உன் ஒருவனுக்கே உண்டு.....'' என்று வரவேற்றார் பாச்சாகமாக்.

பெருமிதத்தால், மகிழ்ச்சியால்,— கர்வத்தால் காண்டாரினால் பேசவே முடியவில்லை. ''எந்தப் பறவையும் என் நகரத்தின் அருகே வந்தது கிடையாது. இதற்காகவே நீ பறவைகளின் தலைவனாகும் தகுதியைப் பெற்றுவிட்டாய். நீ பலம் பொருந்தியவன், பறவைகளுள் மன்னன். பயமற்றவர்களால்தான், பார்வையைக் குருடாக்கிக் கண்களைக் கருக்க வைக்கும் சூரியனின் தகிப்பைத் தாங்கிக் கொள்ள முடியும்.

''என்னைப் போன்றவன் நீ. ஆகவே, நான் பூமிக்கு வருவதானால் உன் உருவத்தில் செல்வேன். வானத்தில் நீயாகிப் பறப்பேன். பூமியில் உள்ள அத்தனை பேர்களுக்கும் நான் பேரரசன். நீ பறக்கும் பறவைகளுக்கெல்லாம் ராஜ ராஜன். என்னுடைய உறைவிடம் சூரிய நகரம். உன்னுடைய இருப்பிடம் சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் நெடிதுயர்ந்த செங்குத்தான மலை முகடுகளாக அமையட்டும். உன்னுடைய அரண்மனையான பனி மூடிய சிகரங்கள் என்னுடைய தங்க அரண்மனையைப் போலவே ஜ்வலிக்கும், என் கிரணங்களால். நீ பூமியை விட்டு நீங்கும்போது என்னை வந்தடை'' என்று காண்டாரை வாழ்த்தினார்.


அன்றிலிருந்து பொலிவியா நாட்டு மக்கள் காண்டார் பறவையான ராஜாளியைப் பறவைகளின் அரசன் என்று மட்டும் பார்க்கவில்லை. அதைச் சூரியக் கடவுளாகவே பாவித்து அன்பு காட்டி மரியாதை செய்து பயபக்தியோடு வழிபடலானார்கள். சூரியனை நோக்கித் தன் அகண்ட பெரிய சிறகுகளை விரித்தபடி பறந்ததே, ராஜாளியாகிய காண்டார் அந்த நிலையிலேயே அதை நினைவுச் சின்னங்கள் எழுப்பும் போது அதன் உச்சியில் அமைத்தார்கள்.

சிரிக்கச் சிரிக்க...!

சாமரா












பரீட்சைகளெல்லாம் முடிந்து விடுமுறையும் ஆரம்பமாகி விட்டது. அந்த வருஷம் உஷாவும் ரமணியும் வெளியூர் எங்கும் போகவில்லை. ரமணியின் வீட்டைச் சுற்றித் தோட்டம் இருந்தது. குளுகுளுவென்ற மாமரத்து நிழலில் உட்கார்ந்தபடி பச்சரிசி மாங்காயைச் சுவைத்துக் கொண்டே விடுகதை போட்டுக் கொண்டிருந்தான் ரமணி. உஷா அவனுக்குச் சளைத்தவளா? அவன் போட்ட விடுகதைகளுக் கெல்லாம் விடைகளை 'டக் டக்' என்று கூறி உடைத்துக் கொண்டிருந்தாள். இப்படி எத்தனை நேரம்தான் விளையாடுவார்கள்! அலுப்புத் தட்டியது. அதே சமயத்தில் தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவர்கள் அப்பாவின் கார் கண்ணில் பட்டது.

காரைக் காரேஜினுள் விடாமல் வெளியே நிறுத்திவிட்டு எங்கோ போயிருந்தார் ரமணியின் அப்பா.



''ஏய், உஷா! ஓடி வா, கார் விளையாட்டு விளையாடலாம்'' என்று கூறியபடி மோட்டாரை நோக்கி ஓடினான் ரமணி. உஷாவும் அவனைப் பின் தொடர்ந்தாள். அப்பாவோடு காரில் போகும்போது அவர்களுடைய இடம் பின் சீட்டுத்தான். அப்பா காரோட்ட, அருகில் அம்மா உட்கார்ந்து கொள்வாள். காரோட்டும் இடத்தில் உட்கார்ந்து ஸ்டீயரிங்கைப் பிடித்து அப்பாவைப் போல் கார் ஓட்டிப் பார்க்க வேண்டும் என்று ரமணிக்கு ரொம்ப நாட்களாகவே ஆசை. அது இப்போது நிறைவேறி விட்டது. அப்பா உட்காரும் இடத்தில் அவன் உட்கார்ந்து கொள்ள அம்மா உட்காரும் இடத்தில் உஷா அமர்ந்து கொண்டாள். ரமணி ஸ்டீயரிங்கைப் பிடித்துக் கொண்டு கார் ஓட்டுவதுபோலப் பொய்யாகப் பாவனை செய்தான்.

''ஏய், உஷா! இதென்னது கீழே பெரிய பெரிய பித்தான்கள்?'' என்றான். அவன் குறிப்பிட்டது பெடல்களையும், லீவரையும். ''முன்னாலேதான் பாரேன், எத்தனை விதமான கடிகாரங்கள்?'' என்றான் ரமணி.

''ஆனால் இந்தக் கடிகாரங்கள் ஒன்றாவது மணி காட்டவில்லை'' என்றாள் உஷா.

முன்னாலிருந்த கடிகாரங்களைத் தடவி ஆராய்ச்சி செய்து கொண்டு வந்த ரமணியின் கையில் ஒரு ஸ்விட்ச் தட்டுப்பட்டது. அதைப் போட்டான். பிறகு அவன் முழங்காலுக்கு அருகே இருந்த ஒரு பிடியைப் பிடித்து அழுத்தி அசைத்தான். அவன் அப்பா காரைக் கிளப்பும்போது இப்படிச் செய்வதைப் பார்த்திருக்கிறானே. அந்த நினைவு மறக்கவில்லை.

'கிர்...ர்...ர்' என்று ஒரு கனைப்பு ஒலி கேட்டது காருக்குள்ளிருந்து. ரமணிக்கும் உஷாவுக்கும் அந்த ஒலி ஒன்றும் அதிசயமில்லை. 'ஆனால் அப்பா காரைக் கிளப்பும்போது இந்தக் 'கிர்ர்' இனிமையாக, ஒரே சீராகக் கேட்டுக் கொண்டே இருக்குமே, ஆனால் இப்போது ஏன் சட்டென்று நின்றுவிட்டது?' இப்படி எண்ணினான் ரமணி.

''இந்த வண்டியை எப்படித்தான் அப்பா வீதியில் அத்தனை லாகவமாக ஓட்டிக் கொண்டு போகிறாரோ?'' என்றாள் உஷா.

''ரொம்பப் பிரமாதமாக்கும். நான் கூடத்தான் இந்தக் காரை ஜோராக ஓட்டுவேன்!'' என்று கூறிய ரமணி, மறுபடியும் விசையை அழுத்திப் போட்டு ஏதோ ஒரு கைப்பிடியைப் பிடித்து ஒடித்தான்.

'கிர்ர்—ர்—ர்' என்ற உறுமல் ஒலி உண்டாயிற்று. இது முன்பு மாதிரி இல்லை. அந்த உறுமல் சீறலாகியது.

''போடா, உனக்கு ஒண்ணும் தெரியல்லே. ஏதோ கோளாறு பண்ணிட்டே. அதனால்தான் இந்தக் கார் இப்படிக்

ஆட்டோவின் கதை

கிருஷ்ணவேணி

கத்தறது'' என்றாள் உஷா, தன் இரு காதுகளையும் பொத்திக் கொண்டே. ரமணிக்கும் அவள் சொல்வது உண்மை என்றே தோன்றியது. அதே சமயம் காரினுள் விளையாடக் கூடாது என்று அவன் அப்பா அடிக்கடி கண்டிப்பாகக் கூறுவதும் நினைவுக்கு வரவே, கொஞ்சம் பயமும் ஏற்பட்டது. இந்தச் சத்தத்தை நிறுத்த என்ன செய்யலாம் என்று இப்படியும் அப்படியும் திருப்பியபோது அவனுடைய கால் கீழேயுள்ள ஒரு பெடலை அழுத்தியது.

அவ்வளவுதான்! 'கிர்...ர்...ர்.' சத்தம் பெரிய கர்ஜனையாகியது. ஒரே பேரிரைச்சல். பயத்தினால் உஷா ரமணியைக் கட்டிக் கொண்டு விட்டாள். அதே சமயம் ஒரு குரல் ''நிறுத்து... நிறுத்து...! என்னை நீ துன்புறுத்துகிறாயே!'' என்று கூச்சலிட்டது.

ரமணிக்கும் உஷாவுக்கும் வியப்பான வியப்பு! 'யார், யாரைத் துன்புறுத்துகிறார்களாம்' என்றான் உஷாவின் காதினருகே குனிந்து. அப்போது அவன் கால் அந்தப் பெடலை அழுத்துவதைச் சற்றே தளர்த்தியது.

''அப்பாடா! இப்போது தேவலாம்'' என்றது ஓர் அமைதியான குரல். அதே சமயம் அந்தக் கர்ஜனையும் பேரிரைச்சலும் தேய்ந்து போயின. ''ஆனால் மறுபடியும் அப்படிச் செய்யாதே'' என்றது அதே குரல் கடுமையாக. ''என்னைக் கிளப்புவதற்கு முயற்சி செய்கிறீர்கள் இல்லையா? ஆனால் நீங்கள் செய்வது சரியில்லையே. முறையாக என்னை ஓட்டுவதற்குக் கற்றுக் கொண்ட பிறகுதான் என் உடலில் உள்ள ஸ்விட்சுகளையோ பெடல்களையோ தொட வேண்டும். என்னோடு இப்படி யெல்லாம் முரட்டுத்தனமாக விளையாடக் கூடாது, தெரிந்ததா? உங்கள் சந்தேகங்களைக் கேளுங்கள். நான் பதில் சொல்லுகிறேன்.''

இப்போதுதான் ரமணிக்கும் உஷாவுக்கும் புரிந்தது — இத்தனை நேரம் பேசியது தங்களுடைய மோட்டார் கார்தான் என்று. 'மோட்டார் கார் கூடப் பேசுமா?' என்றான் ரமணி.

''எல்லாம் பேசும். கோகுலக் குழந்தைகளுடன் எல்லாமே பேசும்'' என்றது கார் கனைத்துக் கொண்டே. ரமணிக்கும் உஷாவுக்கும் வியப்பும் திகைப்புமாக இருந்தது.

முதலில் ரமணிதான் அந்தத் திகைப்பிலிருந்து விடுபட்டான். ''மோட்டார் சார்! உங்களைத் துன்புறுத்தியதற்கு மன்னித்துவிடுங்கள். வீதியில் நீங்கள் கம்பீரமாகச் சவாரி போகிறீர்களே, அது எப்படி? உங்களை ஓடச் செய்வது எது? அப்பா இந்தக் குமிழை அழுத்தியதும் நீங்கள் கனைத்துக் குரல் கொடுக்கிறீர்களே அது எதனால்? இதை யெல்லாம் எங்களுக்கு விளக்க முடியுமா?'' என்று கேட்டான் ரமணி.

''நீ நினைப்பது போல் நீ கேட்டவைகளுக்கெல்லாம் விளக்கம் தருவது அத்தனை சுலபமல்ல. இருந்தாலும் ஆரம்பத்திலிருந்து சொல்லுகிறேன். அப்போதுதான் உங்களுக்குப் புரியும். ஆனால் ஒன்று. இனிமேல் என்னை 'மோட்டார் கார்' என்று கூப்பிடாதீர்கள்.''

'' 'மோட்டார் சார்' என்றல்லவா அண்ணா உங்களை மரியாதையோடு கூப்



பிட்டான்!'' என்றாள் உஷா அண்ணாவுக்குப் பரிந்து கொண்டு.

''காரானாலும் சரி, சாரானாலும் சரி. நான் சொல்ல வந்தது அதையல்ல. என்னை என் தோழர்களெல்லாம் 'ஆட்டோ' என்றுதான் அழைப்பார்கள். மோட்டார் என்று கூப்பிடுவதில்லை.''

''இங்கெல்லாம் 'ஆட்டோ' என்றால் ஆட்டோ ரிக்ஷாவைத்தான் குறிக்கும்.''

''அது உங்கள் ஊரில் இருக்கலாம். ஆனால் உலகம் முழுவதிலும் எங்களை 'ஆட்டோ' என்றுதான் அழைக்கிறார்கள்.''

காருடன் உஷா தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்த போது, யோசனையில் ஆழ்ந்திருந்த ரமணி, ஆட்டோவைக் கேட்டான்: ''நீ கனைக்க ஆரம்பிக்கு முன்பாக நான் ஒரு ஸ்விச்சைத் திருப்பி

னேனே, அப்போது உன்னிடம் நிகழ்ந்தது என்ன என்று சொல்லு!'' என்றான்.

''அந்த ஸ்விட்சைப் போட்டால்தான் நான் கனைப்பேன் என்று நீ புரிந்து கொண்டாய் இல்லையா?'' என்று கண்களைச் சிமிட்டியது ஆட்டோ..

''அப்பா சொல்லி யிருக்கிறார், இந்த ஸ்விட்சைத் திருப்பினால்தான் உன்னுள்ளே மின் பொறிகள் உண்டாகும் என்று. நான் அதை மறக்கவில்லை'' என்றான் ரமணி, ஆட்டோவைப் பற்றித் தனக்குத் தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ளும் பெருமையுடன்.

''பழங் காலத்துக் கார்களைப் பார்த்திருக்கிறாயா நீ? அதன் முன்னால் ஒரு கைப்பிடி இருக்கும். டிரைவர் அம்மாதிரி வண்டியைக் கிளப்ப மூச்சுப் பிடித்துக் கொண்டு அந்த ஹாண்டிலைச் சுற்றுவார். அப்போதுதான் அது 'ஸ்டார்ட்' ஆகும். ஆனால் என்னுள் மின்சார மோட்டார் இருக்கிறது. என் என்ஜினை இயக்க ஒரு ஸ்விட்சைப் போட்டால் போதும். நான் விழித்துக்கொண்டு விடுவேன். நீ அந்தக் குமிழை அழுத்தினால் போதும். என்னுள் இருக்கும் மின் மோட்டார் வெகு வேகமாகச் சுற்றும். அப்போது என் இயந்திரமும் இயங்கும்.''

''மின்சாரம்தானா நீ ஓடுவதற்குக் காரணம்?'' என்று வியப்போடு கேட்டாள் உஷா. ''என் அப்பா எங்கேயாவது போவதென்றால் 'காருக்குப் பெட்ரோல் போடணும்' என்பாரே அது எதற்கு?'' என்று புரியாமல் குழம்பினாள்.

''நான் ஓடுவது மின்சாரத்தினால் அல்ல; பெட்ரோலினால்தான். ஆனால், நான் வேலை செய்வதற்கு என்னைத் தூண்டி விடுவது மின்சார மோட்டார். ஒரு தடவை என்னுள் இருக்கும் பிஸ்டன்கள் மேலும் கீழும் இயங்க ஆரம்பித்தால், நீ சொன்னாயே அந்தப் பெட்ரோல் எண்ணெய்த் துளிகள் வெடித்துச் சக்தியை உண்டாக்கி அந்தப் பிஸ்டன்களைத் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கச் செய்யும். நல்ல சாலைகளாக இருக்குமானால் நான் மணிக்கு அறுபது மைல் வேகம்கூடப் போவேன்'' என்றது ஆட்டோ பெருமையாக.

உஷா ஆட்டோவின் பேச்சில் குறுக்கிட விரும்பா விட்டாலும் ஒரே ஒரு கேள்வி கேட்க வேண்டி யிருந்தது. '' 'பிஸ்டன்' என்றாயே, அப்படி யென்றால் என்ன?''

''உன் அண்ணா ரமணி அவன் சைக்கிள் டயருக்குக் காற்றடிப்பதைப் பார்த்திருப்பாயே? அந்தப் பம்பை அவன் எப்படி இயக்குகிறான்? கைப்பிடியை மேலே இழுத்து மறுபடியும் அதற்குள் அழுத்துகிறானில்லையா? அதுவும் ஒரு

வகையில் பிஸ்டன்தான்'.' என்றது ஆட்டோ.

ரமணிக்குப் பிஸ்டன் என்றால் என்னவென்று தெரியும். ரயில் எஞ்ஜினில் வெளியே இயங்கும் பெரிய பிஸ்டனை அவன் பார்த்திருக்கிறானே. ஆனால் அவன் சந்தேகம் வேறு.

''ஆட்டோ சார்! என் அப்பாவும் அவர் நண்பரும் ஒரு காலனுக்கு இத்தனை மைல் ஓடவேண்டும் என்று வாதித்துக்கொள்ளுகிறார்களே, அதன் பொருள் என்ன?'' என்று கேட்டான்.


''ஓ!'' என்றது ஆட்டோ. அதன் குரலிலிருந்து இந்த வினா அதற்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருப்பதாகத் தோன்றியது. ''உன் அப்பாவுக்கு என்னால் ரொம்பப் பணம் மிச்சமாகும். ஒரு காலன் பெட்ரோலில் நான் நாற்பது மைல்கள் ஓடுவேன். சில கார்கள் ஒரு காலனுக்குப் பதினைந்து மைல்கள் கூடப் போகாது.''

ஆட்டோ பேசிக் கொண்டிருக்கும் போது ரமணி தன் இடது கைப் பக்கமிருந்து ஒரு நீண்ட லீவரைத் தொட்டுக் காட்டி, ''இது எதற்காக?'' என்று கேட்டான்.

''அதுவா? நான் கடினமாக உழைப்பதிலிருந்து என்னைக் காப்பாற்றுகிறது அது. மேடான பகுதிகளிலோ மலை மீதோ ஏற வேண்டுமானால் டிரைவர் இந்த லீவரை முன்னால் தள்ளுவார். என் இஞ்ஜின் வேகமாக இயங்கும். அதனால் நான் மூச்சிறைக்காமல் மேலே ஏற முடியும். அதே மாதிரி சரிவில் இறங்கும்போது இந்த லீவரை மறுபடியும் பின்னால் தள்ளி விடுவார் டிரைவர். நான் பிரயாசையின்றி ஓடுவேன்.''

ரமணிக்குப் புரிந்து விட்டது. அது மட்டுமல்ல. அதற்குப் பக்கத்தில் இருக்கும் இன்னொரு லீவரைப் பற்றியும்கூட அவனுக்குத் தெரியும். அப்பா காரை வீட்டுக் கேட்டின் முன்னால் நிறுத்தும் போது அதைப் பிடித்து இழுப்பதைப் பார்த்திருக்கிறான் ஒரு நாள். அதைப் பற்றிக் கேட்டபோது அதுதான் பிரேக் என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

இவர்களுடன் பேசிக் கொண்டிருந்த இத்தனை நேரமும் ஆட்டோ 'டட் டட்... டட்' என்று கருதி கூட்டிக் கொண்டே இருந்தது. திடீரென்று அதற்குப் புரை ஏறியது போலக் கமறியபடி இருமிற்று. ரமணி அடுத்த கேள்வியைக் கேட்கு முன்பாக ஆட்டோவின் குரல் மெள்ள மெள்ள அடங்கிக் கொண்டிருந்தது. யோசனை ஏதுமின்றிக் கீழுள்ள பெடல்களில் ஒன்றை ரமணி சற்றே மிதித்தான். என்ன ஆச்சரியம்!



படவிளக்கம்:
(A) ஸ்டீரிங் வீல், (B) கியர் லீவர் கைப்பிடி, (C) டிரைவர் ஆசனம், (D) கிளச் பெடல், (E) பிரேக் பெடல், (F) ஆக்ஸலரேடர் பெடல், (G) கியர் லீவர்.

ஆட்டோ மறுபடியும் 'கிர்ர்ர்ர்' என்று குரல் கொடுக்கலாயிற்று.

''அப்பாடா! நல்ல வேளை. இங்குள்ள பெடல்கள், கடிகாரங்களைப் பற்றியெல்லாம் உன்னிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன். அதற்குள் உன் குரல் கம்மிப் போயிற்றே என்று கவலைப்பட்டுப் போனேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினான் ரமணி.

''அந்த இரண்டு விஷயங்களையும் மட்டும் உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். ஆனால் அதற்கு மேல் ஏதும் சொல்ல மாட்டேன். நான் உங்களோடு பேசிக் கொண்டே யிருந்தால் என் வயிற்றில் உள்ள பெட்ரோல் முழுவதும் காலியாகி விடும். அப்புறம் உன் அப்பா வந்து பார்த்துவிட்டு அத்தனை பெட்ரோலும் என்னவாயிற்று என்பாரா'' என்றது ஆட்டோ.

''கீழே மூன்று பெடல்கள் இருக்கின்றனவே. ஆனால் அப்பா ஒரு பெடலில் மட்டும்தான் தம் காலை வைத்துக் கொண்டிருக்கிறார். அது ஏன்?'' என்று கேட்டாள், இத்தனை நேரம் கேள்வியே கேட்காத உஷா.

''அந்தச் சிறிய பெடலைத்தானே சொல்லுகிறாய்? அது என் எஞ்சினை வேகமாகவோ மெதுவாகவோ இயக்க உதவும் ஆக்ஸிலரேட்டர். அதைக் கீழே அழுத்தினால் நான் வேகமாக ஓடுவேன். அதை அழுத்துவதிலிருந்து உன் அப்பா தன் காலை எடுத்தாரானால் நான் மெதுவாகப் போவேன்.''

''மற்ற இரண்டு பெடல்களும் எதற்காக?'' என்று கேட்ட ரமணி, தன் அப்பாவுக்கு எந்தப் பெடலை எப்போது எதற்காக மிதித்து அழுத்த வேண்டுமென்று தெரிந்திருக்கிறதே என்று வியந்து போனான்.

''என் இடப் பக்கம் இருக்கிறதே, அது வண்டி ஓடாதபோதும் என் இஞ்சினை ஓடிக்கொண்டே இருக்கச் செய்யும் க்ளச். டிரைவர் அதன்மீது தன் காலை வைத்து அழுத்தினாரானால் எஞ்ஜின் 'கிர் கிர்ர்ர்' என்று சத்தமிட்டபடி இருக்கும். ஆனால் நான் ஓர் அங்குலம் கூட நகர மாட்டேன். வலது பக்கம் இருக்கிறதே அந்தப் பெடல் மற்றொரு பிரேக். கையால் இயக்கும் ஒரு பிரேக்கும் காலால் இயக்கும் ஒரு பிரேக்குமாக எனக்கு இரண்டு பிரேக்குகள் உண்டு. இந்தப் பிரேக்குகள் என் சக்கரங்களைப் பற்றி நிறுத்தி மலைச் சரிவில் நான் தடதடவென்று ஓடிவிடாமல் தடுக்க உதவுகின்றன...'' இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஆட்டோவுக்கு மீண்டும் தொண்டை கமறலாயிற்று. உஷாவுக்கு ஒரே பரபரப்பு. அந்தக் கடிகாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குள் அது மௌனமாகி விடப் போகிறதே என்று.

''பிளீஸ்... ஆட்டோ! பிளீஸ்...! நேரம் காட்டாத இந்தக் கடிகாரங்கள் எதற்காக என்று மட்டும் சொல்லி விடேன், ப்ளீஸ்!'' என்று கெஞ்சினாள்.

''இதுதான் நான் கூறும் கடைசி விளக்கம். தெரிந்ததா?'' இப்படிக் கூறும் போதே அதன் குரல் தேய ஆரம்பித்து விட்டது. ரொம்பக் களைத்துப் போனவரைப் போலப் பேசியது.

''அங்குள்ள கடிகாரங்களில் ஒன்று என் வயிற்றில் உள்ள பெட்ரோல் எண்ணெயின் அளவை டிரைவருக்கு அறிவிக்கும். இன்னொரு கடிகாரம் என் பாட்டரியில் உள்ள மின்சாரத்தின் அளவைச் சொல்லுவதற்காக. நெடுந்தூரப் பயணத்தின்போது இந்த விவரங்களையெல்லாம் அறிந்து கொள்ள வசதி இல்லா விட்டால் நிலைமை மோசமாகிப் போகாதா?''

''இவைகளைத் தவிர இன்னும் இரண்டு கடிகாரங்கள் இருக்கின்றனவே?'' என்று உஷா குறுக்கிட்டாள். அவைகளைப் பற்றிச் சொல்வதற்குள் ஆட்டோ அமைதியடைந்து விட்டால் என்ன செய்வதென்ற பயம் அவளுக்கு. அதற்கேற்றாற் போல அதன் குரல் வர வரத் தேய்ந்து கொண்டே வந்தது. கிணற்றுக்குள் இருந்து பேசுவது போலச் சொல்லிற்று.

''அவசரப்படாதே! சொல்லாமல் போக மாட்டேன். நான் எத்தனை வேகமாக ஓடுகிறேன் என்பதையும் எத்தனை மைல்கள் ஓடியிருக்கிறேன் என்பதையும் அறிவிக்கிறது ஒரு கடிகாரம். மற்றொன்று என் உடம்பில் உள்ள எல்லாப்

பாகங்களிலும் எவ்வளவு எண்ணெய் இருக்கிறது என்பதைக் குறிக்கிறது. எனக்கு எண்ணெய் வேண்டும் என்று தெரியுமா உனக்கு? என்னை ஓட்டச் சக்தி கொடுப்பது பெட்ரோல் எண்ணெய். ஆனால் என் உடல் பாகங்கள் இயங்க வேறு ஓர் எண்ணெயும் வேண்டும்.''

''மோபிலாயில்தானே?'' என்றான் ரமணி.

''ஆமாம். அது இல்லா விட்டால் என் சக்கரங்கள் இலகுவாகச் சுற்றாது. அதுமட்டுமல்ல. உங்களைப் போலவே, எனக்குத் தண்ணீரும் வேண்டும். நான் சூடாகி விடாமல் என் உடல் ஒரே சீராகக் குளிர்ந்திருக்க வேண்டும்...''

என்ற ஆட்டோவிடம் ரமணி அவசரம் அவசரமாகக் கேட்டான்.

''ஆட்டோ, ஆட்டோ! நீ வேலை செய்வதைப் பற்றிக் கூறினாய், சரி. ஆனால் நீ பிறந்த கதையை, உன்னை உருவாக்கிய மேதையைப் பற்றிச் சொல்லவில்லையே!'' என்றான். அதை அறிந்து கொள்ளுவதில் அவனுக்கு ஆவல்.

''இன்று இனிமேல் என்னால் பேச முடியாது. அதோ உன் அப்பா வேறு வருகிறார். இன்னொரு நாளைக்கு நான் பிறந்து வளர்ந்த கதையையும், நான் எப்படி வேலை செய்கிறேன் என்பதையும் சொல்கிறேன்'' என்று கூறி அமைதியடைந்தது ஆட்டோ.



விநோதக் குரங்குகள்

இந்தமாதிரிக் குரங்குகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? குரங்குகளில் எத்தனை எத்தனையோ வகைகள் உண்டு. விசித்திரமான மூக்கு அமைப்பைக் கொண்ட 'கஹாவ்' என்ற இவ்வகைக் குரங்குகள் இந்தோனேசியாவின் போர்னியோத் தீவில் மட்டுமே காணப்படுகின்றன. அங்கும் இவ்வகை அபூர்வக் குரங்குகள் அரிதாகி வருகின்றனவாம். ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசிலுள்ள பிராங்க்ஃபர்ட் மிருகக் காட்சிசாலையில் உள்ளன இவ்விரு குரங்குகளும். மேல் நோக்கி அமைந்துள்ள மூக்கைக் கொண்டது பெண் குரங்கு. வெள்ளரிக்காய் போலத் தொங்கும் மூக்குடையது ஆண் குரங்கு. இந்த விசித்திர மூக்குத் தம்பதிகளுக்கு ஒரு அழகான - நிஜமாகவே அழகான - குட்டி பிறந்திருக்கிறதாம்!

(படம் உதவி - யு. பி. எஸ்.)





கானவுக்குப்

யாருக்கோ பிறந்த நாள். கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் ஆளுக்கொரு பெரிய சாக்லெட் பாளம் பரிசாகக் கிடைத்தது. அதில் கூறு போட்டிருந்தபடி ஒவ்வொரு துண்டமாகச் சுவைத்துக் கொண்டே கிட்டு சொன்னான்: ''பட்டு, எனக்கோர் ஆசை. சாக்லெட்டை இப்படிக் கணக்காகக் கொடுக்கவே கூடாது. விதம் விதமான சுவை கொண்ட சாக்லெட் பாளங்களை 'உங்கள் விருப்பம்போல் சாப்பிடுங்கள்' என்று நம் முன்னால் குவித்து வைத்து விட வேண்டும். நாம் எடுத்து எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஆஹா! அது எவ்வளவு 'த்ரில்'லாக இருக்கும்!'' என்றான் கடைசித் துண்டு சாக்லெட்டை விழுங்கிச் சப்புக் கொட்டிக் கொண்டே. தங்கள் முன்னால் சாக்லெட் மலையாகக் குவிக்கப்பட்டிருப்பதான கற்பனையில் கிட்டுவும் பட்டுவும் மூழ்கி இருக்கும்போது அங்கே ஈசுவரன் தாத்தா வந்தார். அவரைப்பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே. மந்திர மெழுகை வைத்திருக்கும் பரமேசுவரன் அவர்.

''இரண்டு பேரும் சாக்லெட் கடலில் மூழ்கி இருக்கிறீர்களாக்கும். அது சரி, சாக்லெட் செய்வதற்கு முக்கியமான பொருள் எது?'' என்று கேள்வியையும் கேட்டார்.

''இது தெரியாதாக்கும்; கோக்கோ பவுடர்! அப்புறம் வெண்ணெய், சர்க்கரை இன்னும் என்னென்ன வெல்லாமோ'' என்றான் பட்டு.

''முக்கியமான பொருள் கோக்கோதானே? உலகத்தில் விளையும் மொத்த கோக்கோவில் பெரும் பகுதி விளையும் நாடு எது தெரியுமா?'' என்று கேட்டார் ஈசுவரன்.

''என்ன தாத்தா இன்னிக்குக் கேள்விமேல் கேள்வியாகப் போட்டுக் கொண்டு போறீங்க? எங்களுக்குச் சாக்லெட் சுவைக்கத்தான் தெரியும். இதெல்லாம் தெரியாது'' என்றான் கிட்டு.

''சரியான சாப்பாட்டுராமன் நீ!'' என்று சிரித்தார் தாத்தா. ''கானா என்று ஒரு நாடு கேள்விப்பட்டது உண்டா? அங்குதான் உலகத்தில் விளையும் கோக்கோவில் மூன்றில் ஒரு பங்கு விளைகிறது'' என்றார்.

''ஓ, தெரியுமே! 1957ம் ஆண்டு வரை 'கோல்டு கோஸ்ட்' என்று வழங்கப்பட்ட ஒரு நாடு மேற்கு ஆப்பிரிக்காவில் இருக்கிறது. அது சுதந்திரம் பெற்றபின் தனது புராதனப் பெயரான 'கானா' என்பதைத் திரும்பவும் வைத்துக் கொண்டது. கரெக்ட்தானா தாத்தா? நான் சாப்பாட்டுராமனா, சொல்லுங்கள் இப்போ?'' என்றான் கிட்டு.

'' பதினைந்தாம் நூற்றாண்டில் போர்த்துகீசியர்கள் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரை ஓரமாகப் பிரயாணம் செய்து கொண்டு போனபோது இந்த நாட்டை 'கோஸ்டா டோ ஓரோ' (கோஸ்ட் ஆஃப் கோல்டு)

என்று அழைத்தார்கள். அவர்கள் வியாபாரப் பண்டங்களைச் சேமிக்கக் கட்டிய கற்கோட்டைகளும் மதில் சுவர்களும் இன்றும்கூட இருக்கின்றன. கரெக்டா?'' என்றாள் பட்டு.

''பலே, பலே, பலே!.... நீங்கள் பூகோளப் பாடத்தில் புலிகள் என்று எனக்குத் தெரியாதா? அந்தக் கானாவில் தான் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கோக்கோ மரம்கூடக் கிடையாது. 1879ம் ஆண்டில் டெட்டா காஷி என்ற கொல்லர் போர்த்துகீசியத் தீவுகளில் ஒன்றான ஃபெர்னாண்டோ போ விலிருந்து கொஞ்சம் கோக்கோ விதைகளைத் திருடிக் கொண்டு வந்து இங்கு பயிரிட்டார். கோக்கோ மரத்தின் தாயகம் தென் அமெரிக்கா என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! இதன் பிறகு கோக்கோ பயிருக்கு ஆப்பிரிக்காவின் சீதோஷ்ண நிலை ரொம்பவும் சாதகமாக இருப்பதைக் கண்ட ஆப்பிரிக்கர்கள் இங்கு ஏராளமான கோக்கோ மரங்களைப் பயிரிடலானார்கள். அறுபது வருஷங்களுக்கு முன்னாலே இதே கானா நாடு ஆண்டொன்றுக்கு 800 டன்தான் கோக்கோ விதைகளைப் பயிர் செய்தது. ஆனால் இன்றோ 4,50,000 டன்கள் கோக்கோவை உற்பத்தி செய்கின்றது'' என்று கூறினார் ஈசுவரன்!

போனாலும்...

''தாத்தா, வெறும் விளக்கம் வேண்டாம். எங்களுக்குக் கோக்கோ தோட்டத்தையே நேரில் காண வேண்டும்போல் இருக்கிறது. போகலாம். கிளம்புங்கள் கானாவுக்கு'' என்றான் கிட்டு.

''ஆமாம், தாத்தா! மந்திர மெழுகு டப்பாவை எடுங்கள். சீக்கிரம்'' என்று துரிதப்படுத்தினாள் பட்டு.

ஈசுவரன் தாத்தா மெழுகைக் கொஞ்சமாக எடுத்துக் குழந்தைகளின் புருவங்களில் தடவிக் கொண்டே, ''கோக்கோ மரத்தில் அதன் பழங்கள் எப்படி எங்கு காய்க்கும் என்று நினைக்கிறீர்கள் நீங்கள்!'' என்றார். ஆனால் அவருக்குப் பதில் சொல்லுமுன் கிட்டுவும் பட்டும் கானா நாட்டின் ஒரு கோக்கோ தோட்டத்தின் நடுவே நின்றார்கள். அருகே ஈசுவரனும் இருந்தார்.

''அடேடே! இதுதானா கோக்கோ பழங்கள்? மரத்தின் கிளைகளிலும் அடிமரத்திலும் பலாக்காய் மாதிரி அல்லவா காய்த்துத் தொங்குகின்றன!'' என்றான் கிட்டு அதிசயத்துடன். கிட்டு ஒரு கோக்கோ பழத்தைப் பறித்து உடைத்துப் பார்த்தான். அதற்குள் இருக்கும் கறுப்பான கோக்கோ விதைகளைக் காட்டினார் தாத்தா.

''நீ வசதியாக வாழ்வதற்கு எப்படிச் சுற்றுச் சூழலும் சீதோஷ்ண நிலையும் தேவையோ, அதே போலத்தான் தாவரங்களுக்கும். கோக்கோ மரம் ஆப்பிள் மரத்தைப் போலிருக்கிறது இல்லையா? ஆனால் நீங்கள் ஆப்பிள் மரத்தையும் பார்த்ததில்லையே! போகட்டும். ஆப்பிள் மரத்தைவிடக் கோக்கோ மரத்தில் இலைகள் அடர்த்தி'' என்று கூறியபடி கிட்டுவையும் பட்டுவையும் கோக்கோ தோட்டத்தின் நடு மையத்துக்கு அழைத்துப் போனார்.

''அடேயப்பா! எவ்வளவு அடர்த்தியான காடு? கோக்கோ ஒரு காட்டு மரம் தான்போலிருக்கிறது'' என்றாள் பட்டு.

'' அதிக வெயில் மழை என்றால் நீ உடனே உள்ளே ஓடிப் போய் ஒளிந்து கொள்ளுவாய். மரங்களால் அப்படி ஓட முடியாதே. ஆகவே, ஒவ்வொரு தாவரமும் ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையில்தான் வளர முடியும். உதாரணமாகக் கோக்கோ மரத்துக்குப் பலத்த காற்று கூடாது. உஷ்ண மண்டலக் காடுகளில் மரங்கள் எண்பதிலிருந்து நூறு அடி உயரம் வரை வளர்ந்திருக்கும். இவைகளின் கிளைகள் மேலே பின்



னிப் பிணைந்து குடையாகச் செயல்படும். இந்த இலைக் குடையின் கீழே நிழலில் கோக்கோ மரங்கள் இருபத்தைந்து அடிகள் உயரம் வரை செழித்து வளர்கின்றன. அதிக உஷ்ணமும் காற்றும் கானகத்து மரங்களால் தடுக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, இந்த உஷ்ண மண்டலக் காட்டின் நெடிதுயர்ந்த மரங்கள் ஆண்டு முழுவதும் தங்கள் இலைகளைக் கீழே உதிர்க்குமல்லவா ? அவை பூமியில் மெத்தென்று தங்கி

மக்கிக் கோக்கோ மரத்துக்கு நல்ல உர மாகிவிடுகின்றன. கோக்கோ மரத்துக்கு ரொம்ப தாகம் எடுக்கும். வருஷத்தில் நாற்பத்தைந்து அங்குலம் மழை பொழியும் பிரதேசத்தில்தான் இவை பல்கிப் பெருகுகின்றன.''

''இத்தனை வசதிகளும் இந்தக் கானு நாட்டில் இருக்கின்றன இல்லையா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஆமாம்... இல்லாவிட்டால் இவ்வளவு கோக்கோ இங்கு விளையுமா? கானு நாட்டின் பொருளாதாரமே கோக்கோ மரத்தில்தான் இருக்கிறது.''

''இப்படி இங்கு அமோகமாகக் கோக்கோ விளைகிறதே தாத்தா, அப்படியானால் சாக்லெட்டும் இங்கேயே தயாராகிறதா?'' என்று கேட்டாள் பட்டு.

''அதுதான் கிடையாது. இங்கு விளையும் கோக்கோ விதைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிடுவதோடு கானு நாடு திருப்தி அடைந்து விடுகிறது. இதை இங்கிலாந்தும் அமெரிக்காவும் மற்ற நாட்டினரும் சாக்லெட்டுகளாக்கிக் கொள்ளுகிறார்கள்.''

''கானு நாட்டுக்கு மேலேதானே ஸஹாரா பாலைவனம் இருக்கிறது?''

''ஆமாம். கானு நாட்டிலும் கூட மலையும் பொட்டலும் நிறைந்த வறண்ட பகுதிகள் நிறைய உண்டு. ஆனால் உஷ்ணப் பிரதேசக் காடுகளும் இருக்கின்றன. இதன் தலைநகர் அக்ரா. இதைச் சூழ்ந்துள்ள பகுதிகள் ஐரோப்பியர்கள் வாழ்வதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலையைக் கொண்டிருக்கின்றன.''

''இங்கு ஏதாவது நதிகள் இருக்கின்றனவா, தாத்தா?''

''நாடு என்றால் நதி இல்லாமலிருக்குமா? முக்கியமான நதி ஒல்டா. ஆனால் இந்த நதியினால் இந்த நாட்டுக்கு அதிகப் பயன் ஏதுமில்லை. பல மாதங்கள் வறண்டு கிடக்கும். சில மாதங்களில் பெருவெள்ளம் கரை புரண்டு ஓடும். கடலில் சங்கமமாகும் இடத்திலிருந்து எழுபது மைலில் உள்நாட்டில் ஒரு மலைப்பகுதி வழியே இந்த நதி ஓடி வருகிறது. அகோ ஸாம்போ என்ற இடத்தில் இதைத் தடுத்து ஓர் அணை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 370 அடி உயரம் 700 அடி அகலமுள்ள இம்மாபெரும் அணையைக் கட்ட 30,000,000 பவுன்களுக்கும் மேலே செலவாகுமாம். அமெரிக்காவும் பிரிட்டனும் பொருளுதவி செய்கின்றன. மற்ற நாடுகளின் தொழில் நுட்ப உதவியோடு இதுகட்டப்பட்டு வருகிறது. இந்த அணையினால் கானு நாட்டில் மின்விசை அபரிமிதமாகக் கிடைக்கப் போகிறது. தொழில் வளம் பெருகப் போகிறது. ஒல்டா நதியின் நீர் 200 மைல் நீளமுள்ள ஏரியாகத் தேங்கி நிற்கும். இதிலிருந்து கிடைக்கும் மின்சாரம் இப்போது கானு நாட்டில் கிடைக்கும் மின்விசையைப் போல் இருபது மடங்கு அதிகமாகக் கிடைக்கும்'' என்று புள்ளி விவரங்களை அடுக்கிக் கொண்டு போனார் தாத்தா.

''பவர் கட்டில் நாம் படும் அவதியில் இதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் இது கானுவிலல்லவா? நாம் இப்படிக் கனவுகூடக் காண முடியாதே!'' என்றாள் பட்டு.

''கோக்கோவைத் தவிர இந்நாட்டில் வேறு எதுவும் கிடையாதா?'' என்றான் கிட்டு.

''என்ன அப்படிக் கேட்டுவிட்டாய்! உலகத்திலேயே மாங்கனீஸ் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு கானுதானுக்கும். தங்கம், வைரம், பாக்ஸைட் ஆகியவைகளுக்கும் பஞ்சமில்லை. ஒல்டா நதியில் அமைக்கப் படும் மின் நிலையத்தின் உதவியால் இந்நாட்டில் மிகப் பெரிய அலுமினியத் தொழிற்சாலையை அமைக்கப் போகிறார்கள்.''

பெருமூச்சுவிட்டான் கிட்டு. ''என்னடா அலுப்பு?'' என்றார் தாத்தா.

''கோக்கோ விளையும் நாடாயிற்றே. சாக்லெட் தொழிற்சாலை இருக்கும். அங்கு போகலாம், வேண்டிய மட்டும் சாக்லெட் சாப்பிடலாம் என்று ஆசையோடு வந்தேன். கானுவுக்குப் போனாலும்......'' என்று இழுத்தான் கிட்டு.

''ஏன் தாத்தா, இங்குள்ள மக்கள் .....?'' என்று இழுத்தாள் பட்டு.

''ஆப்பிரிக்க நீக்ரோக்கள்தான். சந்தேகமென்ன? சரி, கிட்டுவுக்குப் பசி வந்துவிட்டது போலிருக்கிறது. நாம் கானுவின் காட்டுக்குள் இதற்கு மேல் போக வேண்டாம். வீடு திரும்புவோம். வாருங்கள்'' என்று புருவத்தில் தீற்றியிருந்த மந்திர மெழுகைத் துடைத்தார். அடுத்த நிமிஷம் கிட்டுவும் பட்டுவும் அவர்கள் வீட்டின் கூடத்திலிருந்தார்கள். ''அம்மா, பசிக்கிறது. சாக்லேட் போடு — இல்லே, இல்லே, சாதம் போடு!'' என்று கூவிக் கொண்டே சமையல் அறையை நோக்கி வேகமாக ஓடினான் கிட்டு.



அடிபட்ட ஆந்தை

வி. கே.

அந்தப் பையன் மாடு மேய்ப்பவன். அவனிடம் ஓர் உண்டி வில் இருந்தது. ஆற்றங்கரை ஓரமுள்ள ஈரக் களிமண்ணை உருண்டையாக உருட்டி அதை உண்டி வில்லில் வைத்துக் குறி பார்த்து மாங்காய், கொய்யா போன்ற பழங்களை அடித்து வீழ்த்துவான். அவனுக்கு அது பொழுது போக்கு. அப்படி ஒரு சமயம் உண்டி வில்லால் அடிக்கும்போது அது மாமரத்திலிருந்த ஆந்தையாரின் உடலைத் தாக்கி விட்டது. ஆந்தைக்கு வலி தாங்க முடியவில்லை. அதனுடைய தோழனான காகத்திடம் ஓடிற்று. "மாட்டுக்காரப் பையன் உண்டி வில்லால் அடித்து விட்டான். வலிபொறுக்க முடியவில்லையே!" என்று கண்ணீர் விட்டது.

"கவலைப்படாதே! குயில் அண்ணன் கைதேர்ந்த வைத்தியர். அவரிடம் போய்க் காட்டலாம். வா!" என்று குயில் வைத்தியரிடம் அழைத்துப் போயிற்று காகம். குயில் ஆந்தையின் உடலை நன்கு சோதித்தது. களி மண் உருண்டை அதன் விலாப்புறத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டது. வலியின் காரணம் அதனால்தான் என்பதையும் புரிந்து கொண்டது. அதே சமயம் ஆந்தையாரின் குணமும் அதன் நினைவுக்கு வந்தது. ஆந்தை ஒழுங்காகப் பணம் கொடுக்காது. "ஆந்தையாரே, உமது உபாதையைக் குணப்படுத்த முடியும். நீர் ஒழுங்காக அதற்கான ஊதியத்தைத் தந்துவிட வேண்டும்" என்றது குயில்.

"தராமல் இருப்பேனா? சீக்கிரம் கவனியும் வைத்தியரே!" என்று அவஸ்தைப்பட்டது ஆந்தை.

"இப்போதே கொடுத்தால்தான் வைத்தியம் செய்வேன்" என்றது குயில் உறுதியாக. ஆந்தையின் வார்த்தையை நம்பத் தயாராக இல்லை அது.

"குயிலாரே, நீங்கள் வைத்தியம் பாருங்கள். ஆந்தையாரின் பணத்துக்கு நான் பொறுப்பாளி" என்றது காக்கை. அதாவது அது தரா விட்டால் நான் தருகிறேன் என்று, ஜாமீன் கொடுத்தது.

"அப்படியானால் சரி" என்று காக்கையின் உறுதி மொழியை ஏற்றுக் கொண்ட குயில், "ஆந்தையாரே, ஏதாவது ஒரு நீர் நிலைக்குப் போய்க் கழுத்தளவு தண்ணீரில் இரண்டு நாழிகை உட்கார்ந்திரும். உமது வலி பறந்து விடும்" என்று வைத்தியம் சொல்லி அனுப்பியது.


ஆந்தையும் காகமும் அருகிலுள்ள ஒரு குட்டைக்குப் பறந்து போயின. ஆந்தை கழுத்தளவு நீருக்குள் வெகு நேரம் முங்கிய படி இருந்தது. களிமண் உருண்டை நீரில் இளகிக் கரைந்து போயிற்று. அதன் வலியும் அத்துடன் பறந்து போயிற்று.

மறுநாள் ஆந்தையிடம் பணம் வசூல் பண்ணக் குயில் போயிற்று. ஆந்தையா கொடுக்கும்? "நீ என்ன பிரமாத வைத்தியம் செய்தாய்? ஒரு மருந்தும் கொடுக்கவில்லை. தண்ணீர் சிகிச்சைக்குப் பணமா? போ, போ!" என்று விரட்டியது.

குயில் இதை எதிர்பார்த்ததுதான். பொறுப்பேற்றுக் கொண்ட காகத்திடம் போய்க் கேட்டது குயில். காகமோ, "என்னிடம் கால் காசு கூடக் கிடையாது" என்று இறக்கையை விரித்து விட்டது.

குயிலுக்குக் கோபமான கோபம். நேரே நீதிபதி நரியாரிடம் போயிற்று. வழக்கைக் கூறியது. நரி நியாயம் வழங்கியது. "ஆந்தை குயிலுக்கு வைத்தியத்துக்கான பணத்தைத் தராவிட்டால் அதற்கு ஜாமீன் கொடுத்த காக்கைதான் அதைக் கொடுக்கக் கடமைப்பட்டது." நரியின் தீர்ப்பை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை காக்கைக்கு. ஆனால் அதனிடமோ கால் காசில்லை. ஆகவே நரி மறு உத்தரவு போட்டது. "இனி குயிலின் முட்டைகளைக் காப்பாற்றித் தரும் வேலையைக் காகம் மேற்கொள்ள வேண்டும்."

ஜாமீன் கொடுத்ததினால் தனக்கு இந்தச் சங்கடம் ஏற்பட்டதே என்று காகத்துக்கு ஒரே கோபம் ஆந்தை மீது. காகத்திடமிருந்து தப்ப ஆந்தை மரப் பொந்துக்குள் போய்ப் புகுந்து கொண்டது. இரவில்தான் வெளியில் வந்தது. அன்று முதல் இன்று வரை இதே நிலைதான். குயிலின் முட்டையைக் காகம் அடை காக்கிறது. காகத்துக்குப் பயந்துகொண்டு பகல் எல்லாம் மரப் பொந்துக்குள் ஒளிந்திருக்கிறது ஆந்தை.



தெரியுமா?



549. விண்வெளியில் 'மில்க்கிவே' (Milkyway) என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! இந்த நட்சத்திரக் கூட்டத்தில் உத்தேசமாக எத்தனை நட்சத்திரங்கள் இருக்கும் என்று சொல்ல முடியுமா ?

550. கனடாவிலிருக்கும் டோராண்டோ மாகாணத்தில் உள்ள ஏரியின் பெயர் தெரியுமா?

551. ஹெல்சிங்கி ஒரு நாட்டின் தலைநகர். அது எந்த நாடு?

552. ட்ரோமடாரி (Dromedary) என்றால் என்ன?

553. அனிமாமீட்டர் என்றால் என்ன?

554. 'ஏரேடட் வாட்டர்' என்றால் தெரியுமா ?

555. மீன்களுக்கு உபதேசம் செய்த கிறிஸ்துவப் பாதிரியார் யார்?

556. கிறிஸ்துவமார்க்க உபதேசங்களான 'நான்கு அதிகாரங்கள் என்று பிரபலமாக வழங்கும் 'ஃபோர் காஸ்பலின்' ஆசிரியர்கள் யார் யார் என்று தெரியுமா ?

557. துந்த்ரா என்பது—ஒரு பெரிய மீன் வகை - ஸைபீரியாவில் உள்ள ஒரு பாலைவனம் - ஒரு வகை வண்டி - இம்மூன்றில் எது சரி.


558. நேவ் (Nave) என்றால்-குற்றவாளி, ஒரு வகைத் தொழுகை, மாதாகோயிலில் தொழச் செல்பவர் உட்காரும் இடம். இவைகளில் எது சரி ?

559. ஹைபர் போல் (Hyperbole) என்பது - மரத்தில் தோன்றும் உருண்டையான வளர்ச்சி, மிகைப்படுத்துதல், சங்கீதத்தில் வழங்கும் ஒரு கலைச் சொல். இதில் எது சரி ?

560. ஐக்கிய அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன், கொலம்பியா மாகாணத்தில் உள்ளது. இது சரியா தவறா ?

561. நியான் விளக்கு எரியவில்லை. ஏனென்றால் அதிலுள்ள ஃபிலமெண்ட் கருகிவிட்டது. இது சரியா தவறா ?

விடைகள்: 549. சுமாராக 1,00,000 மிலியன் நட்சத்திரங்கள். (சந்தேகமானால் எண்ணி பார்த்து விடுங்கள்) 550. ஒண்டாரியோ ஏரி. 551. ஃபின்லாந்து. 552. அரபு நாட்டில் வாழும் ஒற்றைத் திமில் ஒட்டகம். 553. காற்றின் வேகத்தைக் கணிக்கும் கருவி. 554. சோடா - வாயுவை அழுத்தி வைத்திருக்கும் நீர்க் கலவை. 555. புனித அந்தோணியார். 556. மாத்யூ, மார்க், லியூக், ஜான். 557. ஸைபீரியாவில் உள்ள ஒரு பாலைவனம். 558. மாதா கோயிலில் தொழச் செல்பவர் உட்காருமிடம். 559. மிகைப்படுத்துதல். 560. தவறு. வாஷிங்டன் கொலம்பியா ஜில்லாவிலுள்ளது. அது ஒரு மாகாணமல்ல. 561. தவறு. நியான் விளக்கில் பிலமெண்ட் கிடையாது. நியான் வாயுவில் மின்சாரம் பாய்வதால் ஒளி ஏற்படுகிறது.



'கோகுலம்'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்





"'ஜாக்கிரதையாகக் கையாளவும்' என்று எழுதட்டுமா?"

"அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?"

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.


ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம் பூராவையும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை



FDSSR1714TMB